Reigstered at the G. P. O[as][a Newspaper VOUCHER COPY

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்—2 மதுரை

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி சுபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், சுபகிருது சித்திரை 6 ஆம் நாள் துல்கஃதா 13 (19-4-62) வியாழக்கிழமை இதழ் 67

# மேயர் மீது 2-ம் தடவை

## நம்பிக்கையில்லாப் பிரேரணை

### 9 அங்கத்தினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்

### 26ம் தேதி சபை விவாதம் நடக்கும்?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப் மீது இரண்டாவது முறையாகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கான விசேஷ கூட்டத்தை கூட்டுமாறு 9 அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டு இன்று புதிதாக ஒரு எழுத்துமூல வேண்டுகோளை கமிஷனரிடம் கொடுத்திருக்கின்றனர்.

இந்த அங்கத்தவர்களால் முன்னர் கொடுக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் கடந்த 10ம் திகதி மின்சாரக் கோளாறினால் ஒத்திவைக்கப்பட்டது. இந்த ஒத்திவைக்கப்பட்ட விசேஷ கூட்டம் இம்மாதம் 17-ம்திகதி சட்டப்பிரச்சினை சம்பந்தமாக காலவரையறையின்றி மீண்டும் ஒத்திவைக்கப்பட்டதும் ஞாபகமிருக்கலாம்.

மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய விவாதம் இம்மாதம் 26-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுமெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில்

### 46 தபாற்காரர்கள் வேலைக்கு செல்லவில்லை

#### அதிக வேலைக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் 46 தபாற்காரர்கள் நேற்று வேலைக்குச் செல்லவில்லை.

இவர்கள் வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களை போஸ்ட் மாஸ்டரிடம் சமர்ப்பித்திருந்தார்கள். அதிக வேலை செய்ய வேண்டியிருப்பதை ஆட்சேபிக்குமுகமாகவே இவர்கள் வேலைக்குச் செல்லவில்லையெனத் தெரிகிறது.

இதற்கிடையில் அரசாங்க டாக்டர்களிடமிருந்து வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களைப் பெற்று அனுப்புமாறு போஸ்ட் மாஸ்டர் இவர்களுக்கு தந்தி மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

## 'நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம்'

### யாழ். நகரில்ரஷ்ய தூதராலய காரியதரிசி பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

"சமாதானம் மக்களுக்கு அவசியமானது. இந்தோ சீனாவிலும், அங்கோலாவிலும் சமாதானத்துக்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது மற்றைய நாடுகளுக்கும் காட்டுத்தீபோல் பரவி விடுமா என்ற சந்தேகம் வேறு எழுந்துள்ளது. சமாதானத்தைக் காப்பாற்றுவது எப்படி? இதுதான் இப்போது மக்களை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினை"

இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகராலயமுதலாவது காரியதரிசி திரு. விளடிமீர் எம். சிகிற்றன், நேற்று யாழ்ப்

(5ம் பக்கம் பார்க்க)

"தோட்டபாடசாலைகளை

## அரசாங்கம் எடுக்க வழிசெய்ய வேண்டும்"

### பார்லிமெண்டில் திரு. சிவசிதம்பரம் பிரேரணை

கொழும்பு, புதன்

எல்லாத்தோட்டப்பாடசாலைகளையும்இருநேரப் பாடசாலைகளாக்க வேண்டுமென்றும் தோட்டக் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்விக்கு வழி செய்யவேண்டுமென்றும், தோட்ட ஆசிரியர்களுக்குப் போதுமான சம்பளம் அளிக்க வேண்டுமென்றும், போதுமான ஆசிரியர்களை அங்கு அமர்த்தவேண்டுமென்றும் கோரும் ஒரு தீர்மானத்தை திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. பார்லிமெண்டில் இன்று பிரேரணை செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது;—

"3 லட்சம் குழந்தைகளைப் பாதிக்கும் இப் பிரேரணையை விவாதிக்கும் சமயத்தில் கல்வி மந்திரியும் அவரது பாராளுமன்றக் காரியதரிசியும் சபையில் இல்லாதது குறித்து வருந்துகிறேன். கல்விக் கமிஷன் அடிக்கடி சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில் தோட்டப்பாடசாலைகளை எடுப்பதற்கு மாறாகக் கூறியிருந்தது. இச்சபையில் இந்தப் பிரேரணைக்குச் சாதகமாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டபின், கல்விக் கமிஷன் அதன் இறுதி அறிக்கையில் தன் கருத்தை மாற்றிக் கொள்ளும்என நம்புகிறேன்.

தோட்டப் பாடசாலைகளில் போதனமொழி சிங்களமாக இருக்கவேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு குழந்தைக்கு தாய்மொழி மூலமே சிறந்த முறையில் போதனைசெய்ய முடியுமென்று உலகெங்கும் கல்வி நிபுணர்கள் கொண்டுள்ள கருத்துக்கு இது மாறானதாகும்.

தோட்டக் குழந்தைகளுக்கு வசதிசெய்து கொடுப்பது முன்பு அரசாங்கத்தின் கடமையாய் இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒருமசோதா இதைத் திருத்தம் செய்தது. அரசாங்கம் 22 பாடசாலைகளுக்கு மேல் பொறுப்பேற்றது. ஆனால் ஐக்கியதேசியக்கட்சிஅரசாங்கம் இதைத் திடீரென நிறுத்திவிட்டது. நாட்டின் 61 சத விகித வருமானத்தை அளிக்கும் மக்களின் குழந்தைகள் இவ்வாறு நடத்தப்படுவது நீதிக்குமாறானதாகும். தோட்டங்களில் பாடசாலைகளுக்குச் செல்லக்கூடிய 5 வயதுக்கும் 14 வயதுக்கும்இடையான பிள்ளைகள் 3 லட்சத்துக்குமேல் இருக்கிறார்கள். இவர்களில் 75,000 பிள்ளைகளுக்குத்தான் தோட்டப்பாடசாலைகளில் போதிக்கப்படுவதாய் பதிவுப் புத்தகங்கள் கூறுகின்றன.

இனவேற்றுமையின்றி முன்னேற்றக் கொள்கையுடன் செயல்படுவதாகக் கூறும் அரசாங்கம் இவ்விதம் செய்வது நியாயமற்றது. அநேகமாக எல்லா தோட்டப் பாடசாலைகளும் ஒரு நேர வகுப்பையே கொண்டிருக்கின்றன. அதாவது ஒருநாளைக்கு இரண்டரை மணிநேரமே அங்கு வகுப்புக்கள் நடக்கின்றன. பயிற்சி பெற்ற ஒரு ஆசிரியராவது தோட்டப்பாடசாலையில் இல்லை. அக்கிராரம் பெற்ற ஆசிரியர்கள் 12 பேருக்குமேல் இல்லை. தோட்டங்களிலுள்ள 1200 ஆசிரியர்களில் 5 சத விகிதமானோரே எஸ். எஸ். ஸி. தராதரம் பெற்றவர்கள். இவர்களுக்கு வேலைப் பாதுகாப்பும் இல்லை. தோட்டத் துரைமார்கள் விரும்பிய நேரம் அவர்கள் விலக்கப்படுகிறார்கள். எனவே இந்தப் பிரேரணையை அரசாங்கத்தின் சார்பாக ஏற்று தோட்டப் பாடசாலைகளை மேற்கொள்ளுமாறு மந்திரியைக் கேட்டுக்கொள்கிறேன்.

வவுனியா எம். பி. திரு. டி. சிவசிதம்பரம் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில்; மலைநாட்டைச் சீர்திருத்தி இந்நாட்டின் செல்வச் சிறப்புக்கு வழிசெய்தவர்களின் குழந்தைகள் இவர்கள் என்றும், இன்றும் அவர்கள் இந்நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் விளங்கிவருகிறார்கள் என்றும், எனவே அவர்கள் மீது பாரபட்சம் காட்டப்படக்கூடாது என்றும் கூறினார்.

# தமிழில் மாத்திரம் நிகழ்ச்சி நிரல்: அங்கத்தினர்கள் ஆட்சேபனை!

### மாநகர சபை கூட்டத்தில் பலத்த வாக்குவாதம்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரல் தமிழில் மாத்திரம் தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருந்ததை அங்கத்தவர்கள் சிலர் பலமாக ஆட்சேபித்தனர். சிங்களக் கனவான் ஒருவர் கமிஷனராக இருக்கையில் அவருக்குத் தெரியாத மொழியில் சபை நிகழ்சிகளை நடத்துவது அவரை அவமதிப்பதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக அங்கத்தவர்களுக்கிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. இறுதியில் சபையின் தீர்மானம் தமிழில் தான் நடக்கவேண்டுமென்றிருப்பதால் தான் அவ்வாறு அவைகளைத் தமிழில் தயாரிக்க உத்தரவிட்டதாகவும் எதிர்காலத்தில் அவற்றுடன் ஆங்கில மொழிபெயர்ப்புப் பிரதியும் இணைக்கப்படுமெனவும் மேயர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று மாலை மேயர் திரு. எம். ஜேக்கப் தலைமையில நடைபெற்றது. கூட்டம். ஆரம்பமானபோது திரு. ஏ ஜி. இராஜசூரியர் கூட்ட நிகழ்ச்சி நிரல் தமிழில் மாத்திரம் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, தான் அதை வாசித்துத் தெரிந்து கொள்வதற்குப் பாலர் வகுப்பிலிருந்து படிக்கவேண்டுமா? என்றுமேயரிடம் கேட்டார்.

எல்லாம் தமிழில் நடைபெறவேண்டுமென்பது தான் சபையின் தீர்மானம். அதற்கேற்பவே தமிழில் தயாரிக்கப்பட்டது என்று மேயர் பதிலளித்தார். கவுன்சிலைப் பொறுத்தவரை அவ்வாறு இல்லையென்றும் நிர்வாகந்தான் தமிழில் நடைபெறவேண்டும் என்றிருப்பதாகவும் திரு. இராஜசூரியர் கூறினார்.

சபை அலுவல்கள் உட்படச் சகலதும் தமிழில் நடைபெற வேண்டுமென்பது தான் சபையின் தீர்மானமென்றும் குறிப்பிட்ட அங்கத்தவர் தமிழில் நிகழ்ச்சிநிரல் கொடுக்கப்பட்டிருப்பதை ஆட்சேபிப்பது மனவேதனையளிப்பதாக இருக்கிறதென்றும் திரு. பி. எஸ். சோமசுந்தரம் சொன்னார்.

திரு. தேவபாலசுந்தரம் பேசுகையில் தமிழில் படிக்க பாலர் வகுப்புக்குப் போகவேண்டுமா என்று அங்கத்தவர் கேட்பது வெட்கக்கேடான விஷயம் என்று கூறினார்.

#### தீர்மானம்

இதன்பின் பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது திரு. நா. த. செல்லத்துரை கொண்டு வந்த பிரேரணை நிறைவேறியது.

1956-ம் ஆண்டிலிருந்தே இச்சபையின் அலுவல்கள் அனைத்தும் தமிழ் மொழி மூலமே நடைபெறவேண்டுமென்று தீர்மானத்திற்குமேல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள பொழுதிலும்சபையின் அலுவலகங்கள் தமிழில் தொழிற்படாதிருப்பதையிட்டு வருந்தும் இச்சபை பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் சகல பகுதிகளும் உடனடியாகத் தமிழில் கருமமாற்ற ஆரம்பிக்கவேண்டுமென்று நேரிசம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு ஒரு சுற்றறிக்கையை விடவேண்டுமென்று முதல்வரைக் கேட்டுக் கொள்வதுடன் இதுவிடயமாக எளக்கூடிய தாமதங்களை சபை மேலும் பொறுத்துக்கொள்ள மாட்டாதென்பதையும் வற்புறுத்த விரும்புகின்றது.

#### அங்கத்தினர்களிடையே வாக்குவாதம்

கடந்த மாதாந்தக் கூட்ட அறிக்கையில் திருத்தமொன்றைப் புகுத்துவது சம்பந்தமாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மற்றொருபுறத்தில் திருவாளர்கள் துரைராசாவும் இராஜசூரி

(8ம்- பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

EY 3000 தொடர் பிலக்கமுள்ள "வக்சோல் வைவென்" கார் நல்ல நிலைமையிலுள்ளது. உடன் விற்பனைக்கு உண்டு— வ. நட்ண சோதி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர். சைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கைதவறிப்போன பொருள்கள்

பாவித்த சேலை, மேலங்கி, பாவாடை இன்னும் பல பொருள்கள்கொண்ட பார்சல் இருக்கின்றது. உரித்தானவர்கள் நேரில் வரவும்.
ஹோட்டல் பிருந்தாவனம், பெரியகடை, யாழ்ப்பாணம்.

### மாபெரும் தாச்சி விளையாட்டுச் சுற்றுப்போட்டி

வடமாகாண தாச்சிச் சம்பியன் பட்டமும் வெள்ளிக் கிண்ணங்களும் தராதரப் பத்திரங்களும் அளிக்கப்படும்.

போட்டி விதிகள்:
வலி-மேற்குக் கிராமாபிவிருத்திச் சங்க சமாஜ விதிகளுக்கமைய நடைபெறும்.

விளையாட்டு ஆரம்பம்: 28-4-62 பி. ப. 3-30 மணி.

விண்ணப்பப் பத்திரம் முடிவு தேதி: 25-4-62.

விண்ணப்பப் பத்திரம் அனுப்பும் விலாசம்:
ஆ. உமாபதி,
கந்தசாமி கோவிலடி,
இணுவில்,
சுன்னுகம்.

### தேவை

மாணவத் தாதிமார் தேவை. விண்ணப்பஞ் செய்வோர் விண்ணப்பத்துடன் தராதரப் பத்திரம், நற்சாட்சிப் பத்திரம் இவைகளின் பிரதிகளை மாத்திரம் அனுப்பவேண்டும். விண்ணப்ப முடிவுத் தேதி 25-4-62.
காரியதரிசி,
கூட்டுறவு ஆஸ்பத்திரி
மூளாய்,
சுழிபுரம்.

## அதிகாரிகளின் பிரயாணம் குறைக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்
அரசாங்க அதிகாரிகளும் கார்ப்பரேஷன் அதிகாரிகளும் வெளி நாடுகளுக்குச் செல்வதாக விருந்தால் அவர்களது விண்ணப்பப்பத்திரங்களைப்பிரதம மந்திரிக்கு அனுபபி வைக்குமாறு பாதுகாப்பு வெளி விவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது வெளிநாட்டுப் பயணங்களைக் குறைக்கவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு அதிகாரி எதற்காக வெளிநாடு போகிறார் என்பதற்கான அமைச்சின் விளக்கத்துடன் பிரதம மந்திரிக்கு குறிப்பிட்ட அதிகாரியின் விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பி வைக்கும்படி அமைச்சு கேட்கப்பட்டுள்ளது.

அவசிய தேவையெனக் கருதினல் மட்டுமே அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டுமென சகல அமைச்சுக்களும், கார்ப்பரேஷன்களும் கேட்கப்பட்டுள்ளன. இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது பற்றி பிரதம மந்திரியே முடிவாகத் தீர்மானிப்பார்.

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 6-ந் தேதி வியாழக்ழமை (19-4-62), ஹிஜரி வருடம் 1381, ஜுல்கஃதா மாதம் 13-ம் பிறை.

இன்று முழுமையும் பூரணை, இனறு முழுமையும் சித்திரை நட்சத்திரம், சித்தயோகம் சித்திரா பூரணை விரதம், சித்திரைச் சித்திரை, சித்திர குப்த விரதம்.

இராகு காலம் 1-32 முதல் 3-02 வரை.

இன்று அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

சித்திரை: இன்று இவர்களுக்கு அனுவசிய யோசனை, முதியோர் பகை. நல்லோர் வெறுப்பு, குடும்ப சச்சரவு, பணமுடை ஆதியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு தேக நலக் குறைவு, செய் காரியத் தடை, குடும்பத்தில் ஓரளவு நிம்மதி, உறவினர் கொண்டாட்டம் ஆதியன காணப்படுகின்றன.

இடபம்: (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு பணச்செலவு, சமயோசித புத்தி கூடும் உழைப்பு, வித்தைச்சிறப்பு, பணவரவில் தாமதம் ஆகியன காணப்படுகின்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய இன்று இவர்களுக்கு அலைச்சலால் அவதி, தொழிற் சிறப்பு, சந்தோஷம், ஊழியர் உதவி, குடும்ப சுகம் ஆகியன காணப்படுகின்றன.

கடகம்: (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய) இன்று இவர்களுக்கு ஊழியரால் கஷ்டம், கஷ்டம், கடன் பட்டு செலவு செய்தல், நல்லவர், நட்பு, செய்காரிய அனுகூலம் ஆகியன காணப்படுகின்றன.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு முன் யோசனையின்றி பேசுவதால் பகை, நல்லோர் நட்பு, தொழில் செல்வாக்குயர்ச்சி, பண வரவில் தாமதம் ஆகியன காணப்படுகின்றன.

கன்னி: (உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை, முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு வித்தைத்தடை, தொழில் இலாபம், நல்லோர் வருகை, பணவரவு, கடன் நீக்கம், நண்பர் சேர்க்கை ஆகியன காணப்படுகின்றன.

துலாம்: (சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன் முக்கால் முடிய) இன்று இவர்ளுக்கு அனுவசிய யோசனைகள், நல்லவர் பகை, வாக்குக் கடுமை, முக்கியஸ்தர் சந்திப்பினல் தொழில நலம் கடன் வரவு ஆகியன காணப்படுகின்றன.

விருச்சிகம்: (விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை, முடிய) இன்று இலர்களுக்கு செல்வாக்கு அபிவிருத்தி, பண வரவு, சுப செய்தி கேட்டல், பிரயாண சுகம், சகோதர வழி கஷ்டம், நல்லோர் நட்பு ஆகியன காணப்படுகின்றன.

தனு: (மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு அனுவசிய சஞ்சலம், செய்காரிய தாமதம், சகோதரர் உதவியால் தொழில் நலம் அடைதல், மதிப்பு ஆகியன காணப்படுகின்றன.

மகரம்: (உத்தராடம் பின் முக்கால், திருவோணம் அவிட்டம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு அனுவசிய பணச் செலவு, கடன் படல், உழைப்புக் கடுமையானலும் பலன் குறைதல், மனதைரியம் ஆகியன காணப்படுகின்றன.

கும்பம்: (அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு செலவு, வெறுப்பு, கடன்படல், பழைய பாக்கி வராமை, தொழில் தாமதம், குடும்பத்தினல் உதவி ஆகியன காணப்படுகின்றன.

மீனம்: (பூரட்டாதி4ம்பாதம், உத்திரட்டாதி, ரேவதி முடிய) இன்று இவர்களுக்கு குடும்ப சுகம், சுபகாரும முயற்சி, தொழிலில் கடும் உழைப்பு, மதிப்புயர்ச்சி, சிந்தனைத் தெளிவு ஆகியன காணப்படுகின்றன.

## "உடல் வலிமை இளைஞருக்கு அவசியம்"

### விளையாட்டுப்போட்டியில் கல்லூரி அதிபர்

காங்கேசன் துறை, புதன்
"இன்றைய இளைஞர்களே சமுதாயத்தை வழி நடத்த வேண்டிய பொறுப்புள்ளவர்கள். அவர்கள் உளத்திண்மையும் உடல் வலிமையும் உள்ளவர்களாயிருந்தால் மட்டுமே சமுதாயத்தை வழி நடத்த முடியும். உள்ளத்திண்மையைக் கல்வி அளிக்கின்றது. உடல் வலிமை விளையாட்டுக்களினலே அமைகின்றது. இன்றுள்ள இளைஞர்கள் அனைவரும் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு சிறந்த வலுவுள்ளவர்களாக விளங்க வேண்டும்."

காங்கேசன் துறை நடேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. ஆ. மார்க்கண்டன் காங்கேசன் துறை குரு விளையாட்டுக் கழகத்தின் நான்காவது வருடாந்த விளையாட்டுப்போட்டிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:-

பண்டைக்காலத்திலே மக்கள் சிறந்த திடகாத்திரமுள்ளவர்களாக இருந்தமையினலே தான் அவர்கள் போர்க்களங்களில் சிறப்பாகப் பேரிட முடிந்தது. உடல் வளத்திற்கு தேகாப்பியாசம் இன்றியமையாதது."

5-ம் பக்கம் பார்க்க

### ராஜ தந்திர ரகசியம்!

"....இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது அனுட்டிக்கப்பட வேண்டியிருந்த இராஜதந்திர நடவடிக்கை ஒன்றினை உங்களுக்கு நான் சொல்லிவைக்க விரும்புகின்றேன். அதை நீங்களும் அறிந்திருந்தால், உங்கள்நாளில் தேவை ஏற்படும் போது பயன்படுத்திக் கொள்ள உதவும்...."

பேராசிரியர் சுந்தரலிங்கம்என்னசொல்லப் போகிறுரோ? 22-4-'62 ஈழநாடு ஞாயிறு இதழில் வெளியாகும் 'ஈழப் பாட்டனின் கடித'த்தைப் படித்து அறியுங்கள்.


# 4000 ரூபாய் விரு!

# காணேஷன்

ஒரு 15 அவுன்ஸ் போத்தலில் எத்தனை குவிக்கப்பட்ட தேக்கரண்டி அளவு காணேஷன் மால்ட்டட்மில்க் உண்டு?



முதல் பரிசு ரூ. 2000/-
இரண்டாம் பரிசு ரூ. 500/-
மூன்றும் பரிசு ரூ. 250/-
பத்து 100/- ரூபாய் பரிசுகள்
ஐந்து 50/- ரூபாய் பரிசுகள்

பிரவேசப் பத்திரங்களோ கூப்பன்களோ இல்லை. பிரவேசக் கட்டணமும் இல்லை. நீங்கள் செய்யவேண்டியது இதுவே: உங்கள் விடையையும் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக ஒரு காணேஷன் மால்ட்டட் மில்க் லேபலின் பின் பக்கம் எழுதுங்கள். நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களும் அனுப்பலாம்.

பிரவேசப் பத்திரங்கள் அனுப்பவேண்டிய விலாசம் இதுவே:
காணேஷன் விரு,
தபாற் பெட்டி 1283,
கொழும்பு.

போட்டி நீதிபதிகள், சாதாரண தேக்கரண்டி பாவித்து, அடைந்த சரியான விடையை கொழும்பு நேஷனல் அன்ட் கிரின்லேஸ் வங்கியில் முத்திரையிடப்பட்டு பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது.

சரியான விடை கிடைக்காவிடில், கிட்டத்தட்ட சரியான விடைகளுக்கு, அவைகளின் சரியானத் தன்மையின் பிரகாரம் பரிசுகள் கொடுக்கப்படும்.

பல விடைகள் சரியானதாக இருக்குமாகில், முதல் பரிசு முதல் திறக்கப்படும் சரியான விடைக்கு அளிக்கப்படும்; இரண்டாவது பரிசு இரண்டாவது திறக்கப்படும் சரியான விடைக்கு அளிக்கப்படும். மற்ற பரிசுகளும் இந்த பிரகாரமே கொடுக்கப்படும்.

போட்டி நீதிபதிகளின் முடிவு இறுதித் தீர்வாவும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். எனவே, இப்போட்டியைப்பற்றி கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏ. எப். ஜோன்ஸ் ஸ்தாபனத்திலும், இன்டநெஷனல் எட்வட்டைசிங் சேவிசஸ் ஸ்தாபனத்திலும் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களும் தங்கள் உடன் குடும்பத்தார்களும் இப்போட்டியில் பங்குபற்ற அனுமதி அற்றவர்கள்.




போட்டி முடியுந் தினம் மே 15

# ஜெனிவா படைகுறைப்பு மகாநாட்டில் திடீர்திருப்பம்

## அமெரிக்க அணுஆயுதசோதனை அடுத்தவாரம் ஆரம்பமாகும்

வாஷிட்டன் ஏப். 18

பூமிக்குமேல் அணுஆயுத சோதனைகளை ஆரம்பிக்கும் அமெரிக்காவின் திட்டத்தின்படி முதலாவது பரீட்சை அடுத்தவாரம் ஆரம்பமாகுமென நேற்று நியூயோர்க்கில் அறிவிக்கப்பட்டது. அநேகமாக அடுத்த செவ்வாய்க்கிழமை அணுஆயுத பரிசோதனை நடைபெறலாமெனத் தெரிகிறது.

இதே சமயம் அணுஆயுத சோதனைத்தடை ஒப்பந்தம் சம்பந்தமாக கிழக்கு-மேற்கு நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு நடுநிலைமை நாடுகள் சமர்ப்பித்த புதிய சமரசத் திட்டத்தை ஜெனிவாவில் நடைபெறும் படைகுறைப்பு மகாநாடு பரிசீலனைசெய்து வருகிறது.

## சோவியத்-அமெரிக்க நகல் திட்டம் அங்கீகாரம்

ஜெனிவா, ஏப். 18

ஜெனிவாவில் கூடியுள்ள 17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாட்டில், மகாநாட்டின் கூட்டுத் தலைவர்களான சோவியத் யூனியனும் அமெரிக்காவும் படைகுறைப்புச் சம்பந்தமாகத் தயாரித்த நகல் திட்டத்தின் முக்கிய வாசகத்தை படைகுறைப்பு மகாநாடு நேற்று ஏற்றுக்கொண்டது.

அமெரிக்கப் பிரதிநிதி ஆர்தர் டீனும், சோவியத் பிரதிநிதி திரு. ஸோரினும் தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின் இந்த நகல் திட்டத்தைத் தயாரித்தனர். இந்த நகல் திட்டத்தின் ஒரு அம்சத்தையும் சில வாசகங்களையும் நீக்கியபின்னர் இந்தியப் பிரதிநிதி ஆர்தர்லால் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டின் நேற்றைய கூட்டம் நகல் திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

சென்ற உலக மகாயுத்தத்தின்பின் கிழக்கு, மேற்கு நாடுகள் ஒரு திட்டத்தை அநேகமாக அதன் முழு அளவில் அங்கீகரித்தது இதுதான் முதல் தடவையென்றும் உலக சமாதானத்துக்கு இது ஒரு நல்ல அறிகுறியென்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இணக்கம் ஏற்படாமலிருக்கும் ஒன்றிரண்டு அம்சங்களிலும் இணக்கம் ஏற்படுவதற்கு அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஆர்தர் டீனும், சோவியத் பிரதிநிதி திரு. ஸோரினும் மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றனர்.

அமெரிக்க-சோவியத் தயாரித்த இந்த நகல் திட்டத்தை பிரிட்டிஷ் பிரதிநிதி பெரிதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

உலகில் எந்தப் பிரச்சினையையும் போர்மூலம் தீர்த்துக்கொள்ளக் கூடாதென்றும், மனித குலத்தின் மத்தியிலிருந்தே போர் ஒழித்துக் கட்டப்படவேண்டுமென்றும், ஐ. நா. சாஸனத்துக்கமைய நாடுகள் நடந்துகொள்ளவேண்டுமென்றும் அந்த நகல் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

கண்டிப்பான சர்வதேசக் கட்டுப்பாட்டுடன் கூடிய படைவிலக்கல் என்றும் அத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

எப்பிரச்சினைக்கும் சமாதான வழியிலேயே தீர்வு காண நாடுகள் முயற்சி செய்யவேண்டுமென்றும் சர்வதேச ஒப்பந்தங்களை நாடுகள் மதித்து நடக்கவேண்டுமென்றும் அந்த நகல் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது

## கோவாவிலுள்ள போர்ச். காவற் கைதிகள்

### மர்ம கோவாவுக்கு வந்து அழைத்துச்செல்ல யோசனை

புதுடில்லி, ஏப்ரல் 18

கோவா, டாமன், டையூ ஆகிய பகுதிகளிலுள்ள போர்ச்சுக்கீஸிய காவல் கைதிகளை ஏற்றிச்செல்வதற்கு போர்ச்சுக்கல் அரசாங்கம் அனுப்பியுள்ள கப்பல்கள் நேராக மர்மகோவா துறைமுகத்துக்கு வந்து அவர்களையும் அவர்களது உடமைகளையும் சிரமமின்றி எடுத்துச் செல்லலாமென்று இந்திய அரசாங்கம் போர்ச்சுக்கல் அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளது.

காவல் கைதிகளை அழைத்துச் செல்வதற்காக போர்ச்சுக்கீஸியக் கப்பல்கள் கராச்சிக்கு வரவிருக்கின்றன. இக்கைதிகளை பம்பாயிலிருந்து கராச்சிக்கு விமானத்தில் அனுப்பிவைக்கும் திட்டத்தில் மாறுதல் இல்லையென்றும் ஆனால் நேராக மர்மகோவாவுக்கு வந்து அழைத்துச் செல்வது சுலபமென்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

கோவா, டாமன், டையூ ஆகிய பகுதிகளில் 4300 போர்ச்சுக்கீஸிய கைதிகளுள்ளனர். போர்ச்சுக்கீஸியரை மணந்த கோவானியர்கள் 60 அல்லது 70 பேர் உள்ளனர். இவர்கள் போர்சுக்கலுக்குச் செல்லவிரும்பினால் இந்திய அரசாங்கம் அனுமதிக்கும் என்று ஒரு அதிகாரி தெரிவித்தார்.

கோவா, டாமன், டையூ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எவரும் போர்ச்சுகலுக்கு ஒரேயடியாகச் செல்ல விரும்பினாலும் இந்தியா அனுமதிக்குமென அந்த அதிகாரி தெரிவித்தார்.

---

## லோகசபை சபாநாயகர்

### திரு. ஹுக்கும்சிங் தெரிவு

புதுடில்லி, ஏப்ரல் 17

சர்தார் ஹுக்கும்சிங், இன்று லோகசபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய சபாநாயகரை அரசாங்கக் கட்சித் தலைவர் திரு. நேருவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. கே. கோபாலனும் அழைத்துச்சென்று, சபாநாயகர் ஆசனத்தில் அமர்த்தினர்.

திரு. சத்தியநாராயண்சின்ஹா புதிய சபாநாயகரின் பெயரைப் பிரேரிக்க, அதை மந்திரி கொபாலரெட்டி ஆமோதித்தார். ஓட் எடுக்கப்பட்டபோது அவருக்கெதிராக ஒரு குரலும் எழுப்பப்படவில்லை.

பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் புதிய சபாநாயகரைப் பாராட்டிப் பேசினர்.

## லண்டனில் யாழ்ப்பாணம் எம். பி.

லண்டன், எப்ரல் 17

ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா லண்டன் வந்துசேர்ந்தபோது அவருக்கு இங்குள்ள இலங்கை மாணவர் சங்கப் பிரதிநிதிகளும் சங்கத் தலைவரும் வரவேற்பு அளித்தனர். திரு. துரையப்பாவுடன் மூதூர் எம். பி. திரு. மஜீத்தும் வந்திருந்தார்.

லண்டன் காமன் சபைக்கும் இவர்கள் விஜயம்செய்தனர். காமன்சபை அங்கத்தவர்களால் மத்திய விருந்துபசாரமொன்றும் அளிக்கப்பட்டது. இதில் முன்னாள் பிரதமர் சேர். வின்சன்ட் சேர்ச்சிலும் கலந்துகொண்டார்.

இவர்கள் ஜெர்மனி, ஜெனிவா, ஒக்ஸ்போர்ட், ரோமாபுரி ஆகிய இடங்களுக்கும் சென்றுவிட்டு இலங்கை திரும்புவர்.

## கேரள கவர்னர்

### திரு. கிரிதொடர்ந்து பதவியிலிருப்பார்

திருவனந்தபுரம், ஏப். 17

கேரள கவர்னராக திரு. வி. கிரி இன்னும் ஐந்து வருடகாலத்துக்குப் பதவி வகிப்பாரென அறியப்படுகிறது. திரு. கிரி தொடர்ந்து பதவியிலிருக்க வேண்டுமென்று கேரள அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டதாகவும் இதற்கு மத்திய அரசாங்கம் சம்மதித்துள்ளதாகவும் தெரிகிறது.

1960-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் திகதி திரு. கிரி கேரளகவர்னராகப் பதவியேற்றார்.

---

## மின்னல் அதிர்ச்சியால் சேதம்!

தெல்லிப்பழை, செவ்வாய்

கடந்த சனிக்கிழமை மாலை மின்னல் அதிர்ச்சியினால் சில இடங்களிற் சேதம் ஏற்பட்டுள்ளது. கீரிமலை சிவன்கோவில் பலஓடுகள் உடைந்து 30 அடி உயரத்திலிருந்து கீழே விழ்ந்தன. பலர் வழி பாடாற்றிக் கொண்டிருக்கையில் அவர்கள் முன்பாக இந்த ஓடுகள் விழுந்தன எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பன்னாலையில் திருவருள் என்பவருடைய வீட்டின் முன்புற மதில் சுவர் மின்னல் அதிர்ச்சியினால் திடீரென இடிந்து விழ்ந்தது.

## ஐக்கிய இலங்கையை உருவாக்க சகிப்புத்தன்மைவேண்டும்

-சேர் அல்பேர்ட் பீரிஸ்

நாத்தாண்டியா, புதன்

"ஒரே நாளிலே ஒரு ஐக்கிய இலங்கையை நாம் உருவாக்கிவிடமுடியாது. பிறரைப்புரிந்து கொள்வதாலும், சகிப்புத்தன்மையை வளர்ப்பதாலுமே நாம் ஐக்கிய இலங்கையை உருவாக்கலாம்" இவ்வாறு நாத்தாண்டியா எம். பி. சேர் அல்பேர்ட் பீரிஸ் இங்குள்ள அரசாங்க பாடசாலையொன்றில் நடைபெற்ற புதுவருடதினக் கொண்டாட்டத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டார.

சேர் அல்பேர்ட் பீரிஸ் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

மக்களின் மனப் புண்களை ஆற்றி அவர்களின் உள்ளத்தே தேசப்பற்றை வளர்க்க காலம் நல்ல உதவி புரியும் தமது தாய்நாட்டுக்குச்செய்ய வேண்டிய பொறுப்புவாய்ந்த கடமைகளை உணர்ந்து மக்கள் அவற்றை செயல் படுத்த வேண்டும். நம் நாட்டுக் கலாசாரத்துக்கேற்ப நாம் நடந்து கொள்வதால் தான் நாட்டுப் பற்று நம்மிடையே வளரும். தேசிய கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதாலும் நம்மிடம் தேசப்பற்று வளரும் இது நாட்டு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும் மிகவும் உதவுகிறது.

---

## இ. போ. ச. கூட்டுச் சபையின் ஆட்சேபம்

கொழும்பு, செவ்வாய்

இ. போ. சபை தனது ஊழியர்களுக்கென வரையறை செய்த ஒழுங்கு முறைச் சட்டங்கள் 51-ல் இரண்டு விதிகளுக்கு இ. போ. ச. வின் கூட்டு சபைக கமிட்டி ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

41-வது இலக்க சுற்றறிக்கை வாபஸ் செய்யப்பட்டதும் இந்த 51 சட்ட நியதிகளை இ. போ. ச. வரைந்தது. இச்சட்டங்கள் வரையப் பட்டகாலம் தொடக்கம், அவை கூட்டு சபைக்கு சமர்ப்பிக்கப் பட்டு அதன் ஆலோசனைகளைப் பெற்றன. தொழிலாளர் பிரதிநிதிகள் மூவரையும், நிருவாகத்தின் பிரதிநிதிகள் இருவரையும் கொண்ட கமிட்டியொன்றை நியமிப்பதெனக் கூட்டு சபை தீர்மானித்தது.

## 'சிங்களத்தைப் படியுங்கள்'

### தோட்டத் தொழிலாளருக்கு விஜயமானே புத்திமதி

களுத்துறை, புதன்

"மலைநாட்டுத் தொழிலாளர்கள் சிங்களத்தைப் படிப்பதால் கிராமப்புறத்திலுள்ள சிங்கள மக்களுடன் சகஜமாகப் பழக இது வழிசெய்வதாக இருக்கும்"

இவ்வாறு திரு. டபிள்யு. கே. விஜயமானே டால்கெயில் தோட்டத்தில் நடைபெற்ற தேசிய தொழிலார் காங்கிரஸ் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. விஜயமானே மேலும் பேசியதாவது;

இலங்கை இந்தியப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அக்கறையின்மை காட்டக் கூடாது. அரசியல் வாதிகள் வகுப்பு வாதத்தைக் கிளப்பிவிடுவதற்கு தோட்டத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்கு தொழிலாளர்கள் இடம் கொடுத்துவிடலாகாது.

தோட்டத் தொழிலாளர்கள் ஒதுக்கப்பட்டு வாழ்வது நாட்டுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவிருக்கும்.

தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் சேர்வதால் தொழிலாளர்களுக்கு நஷ்டத்தையே விளைவிக்கும். தொழிற் சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களைப் பிரித்து ஒதுக்கிவைக்கவே முயற்சி செய்கின்றன. உரிமையைப் பெற இது உதவி செய்யாது.

தோட்டப் பாடசாலைகள் முறையாகப் பேணப்படாதது குறித்து நான் ஆச்சரியமடைகின்றேன். 100 மாணவர்களுக்கு இங்கு ஒரு ஆசிரியர் பாடபோதனை செய்ய வேண்டியிருக்கிறது.

மற்றப் பாடசாலைகளைப் போன்று தோட்டப் பாடசாலைகளும் சீராகக் கவனிக்கப் படவேண்டும். தோட்டப் பாடசாலைகளில் சிங்களம் கட்டாய மொழியாகப் பயிற்றப் படவேண்டும்.

தோட்ட மாணவர்களின் முன்னேற்றத்துக்கு இது உதவிபுரிவதாக விருக்கும்."

## 15 லட்சம் பிள்ளைகளுக்கு தடுப்பு மருந்து

கொழும்பு, செவ்வாய்

வருகிற மூன்று வாரகாலத்தில் மேலும் 15 லட்சம் பிள்ளைகளுக்கு இளம்பிள்ளைவாத நோய் தடுப்பு மருந்து வழங்கப்படும். 6 மாதக் குழந்தைகள் தொடக்கம் 15 வயது வரை அடைந்துள்ள பிள்ளைகளுக்கே தடுப்பு மருந்து வழங்கப்பட விருக்கிறது.

இளம்பிள்ளை வாத நோய் பெருந்தொகையில் மேலும் ஒரு தடவை மக்களிடையே பரவாமல் தடுக்கு முகமாகச் சுகாதார இலாகா மேற்கொள்ளும் நடவடிக்கையின் முதல் கட்டம் இதுவேயாகும்.

ராஷ்யா அனுப்பி வைக்கும் 40 லட்சம் ஊட்ட மருந்து முதலில் உபயோகிக்கப்படும். மேற் குறிப்பிட்ட வயதில் 4,000,000 பிள்ளைகள் இங்கு இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

---

## குரோமிக்கோ-டிட்டோ சந்திப்பு

பெல்கிரேட், ஏப்ரல் 18

சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோ யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். யூகோஸ்லேவிய வெளிவிவகார மந்திரியையும் திரு. குரோமிக்கோ சந்தித்துப் பேசினர்.

விருந்துபசாரமொன்றில் திரு. குரோமிக்கோ பேசுகையில் யூகோஸ்லேவியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமுள்ள உறவு அபிவிருத்தியடைந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

### மணி வாக்கு

கடவுளின் உண்மையான பக்தன் யார்? மனித குலத்துக்குச் சேவை செய்பவர் தான். நம்மில் ஒவ்வொருவர் உள்ளும் கடவுள் குடிகொண்டுள்ளார். நாம் அனைவருக்கும் பணி புரியும் போது, உண்மையில் அவர்களுக்குள்ளிருக்கும் தெய்வத்துக்கே தொண்டு செய்கின்றோம். யாரையும் நாம் வெறுத்தோமாயின் நாம் தெய்வத்திடம் அன்புள்ளவர்களாகமாட்டோம். நாம் பிறரை நேசிக்கையில் கடவுள் மிக மகிழ்ச்சி அடைகின்றார்.

—சுவாமி ராமதாஸ்.


ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 6உ (19-4-62)


## ஒற்றுமையின் அவசியம்

தமிழரிடையே பிளவுகள் ஏற்படுத்த சில பிரிவினை சக்திகள் மீண்டும் தலை தூக்குவதாயும், பிரதேசம் முதலிய காரணங்களைக் கூறி பிரிவினை முயற்சி நடப்பதாயும் மட்டக்களப்பில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் மட்டிருப்பு எம். பி. யும், தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு எஸ். எம். இராஜமாணிக்கம் கூறி வருந்தினர்.

அரசியலிலும் பொது விஷயங்களிலும கருத்து வேற்றுமைகள் இருப்பது இயற்கை. அதிலும் நுண்ணறிவு மிக்க தமிழரிடையே கருத்து வேற்றுமைகள் நிலவுவதில் வியப்பில்லை. ஆனல் இவ்வேற்றுமைகள் எவ்வளவு இருப்பினும், தங்களது உயிர் போன்ற தாய்மொழியின் உரிமையையும் மானத்தையும் காக்க வேண்டிய விஷயத்தில், தமிழரிடையே வியப்பளிக்கத்தக்க ஒற்றுமை நிலவி வந்தது. இந்த ஒற்றுமைதான் தமிழரின் உண்மையான பலமாகும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்று மகாகவி பாரதியார் கூறியபடி, இவ்வித ஒற்றுமை மூலமே மொழி உரிமையையும் குடி உரிமையையும் பெற முடியும்.

இந்த உரிமைகளை அளிக்க வேண்டுமென்று சிங்களத் தலைவர்களில் சிலரே பகிரங்கமாகக் கூற முன்வந்திருக்கையில், தமிழரிடையே வடக்கு, கிழக்கு, வவுனியா, மலைநாடு என்று பிரதேச வேற்றுமைகளையும் சாதி, மதம் என்ற பிரிவினைகளையும் கிளப்ப முற்படுவது. வெண்ணை உருகுகையில் தாழியை உடைப்பதை ஒக்கும். இவ்வித பிளவுகள் தமிழரின் பலத்தைக் குறைப்பதுடன், அவர்கள் தங்களது நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கு முட்டுக்கட்டை போடுவதாகவும் தற்கொலை செய்து கொள்ளுவதாகவும் முடியும்.

எந்த நோக்கத்துடன் இப்பிளவுகளைக் கிளப்பினலும் சரி, தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழி, அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு இவை முட்டுக்கட்டைகளாக இருக்குமாதலால், இப்பிளவுகளை நீக்கவும், முக்கிய விஷயங்களிலாவது ஒற்றுமை ஏற்படுத்தவும், இப்போது முயற்சி செய்ய வேண்டியது அவசியம். தேர்தல் முதலிய ஆசைகளற்ற தமிழ்ப் பெரியார்கள் முன் வந்து தமிழ் ஒற்றுமை மட்டுமன்றி, தேசிய ஒற்றுமையையும் ஏற்படுத்தி நாட்டின் மேலான முன்னேற்றத்துக்கு உழைப்பதற்கு இது தக்க தருணமாகும்.

# ஈழத்தில் கர்நாடக இசையின் வளர்ச்சி

(எஸ். பரம் தில்லைராஜா)

உலக இசையை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை, மேற்குநாட்டு இசை, இந்திய இசை என்பனவாம். இந்திய இசையின் ஒரு பிரிவே கர்நாடக இசையாகும். மற்றது இந்துஸ்தானி இசையாகும். கர்நாடக இசை இந்தியாவின் விந்திய மலைத் தொடரிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் அடங்கி உள்ளது. பொதுவாக தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய பாஷைகளில் பாடல்களை இயற்றியுள்ளனர் இதற்கென தனிச்சிறப்புகள் பல உள.

இனி, ஈழநாட்டில் கர்நாடக இசை கடந்த ஐம்பது வருடங்களாக எந்த நிலையில் இருந்ததென்பதையும், அதன் வளர்ச்சியையும் ஆராய்வோம். எமது நாட்டில் இந்த இசையைப் பேணிக்காப்பாற்றிய பெருமை இசை வேளாளர் சமூகத்திற்கு உரியது. நாதஸ்வர வித்வான்களுக்கு ஈழத் தமிழ் மக்கள் இதற்கென்றும் கடமைப்பட்டுள்ளனர். கர்நாடக இசையை மற்றும் சமூகத்தவர் ரஸித்திருந்தாலும் 1924-ம் ஆண்டிற்குப்பிறகுதான் முதன் முதலாக வேறு சமூகத்தவர் இதில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. அக்காலத்தில் இசை வேளாளர் சமூகத்தின் பல பாடகர்களும் மற்றும் வாத்தியக்காரர்களும் இருந்தனர் என நாம் அறிகிறோம். கேவலம், 20-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சங்கீதத் தொழிலை மிகவும் இழிவான தொழிலாகக் கருதினர். நாதஸ்வர வித்துவான்களில் திரு. அண்ணாசாமிப்பிள்ளை அவர்களையும், திரு. பக்கிரிசாமிப்பிள்ளையவர்களையும், திரு. முருகையா அவர்களையும் மறக்கலாகாது. அத்துடன் தவில் வித்துவான் காமாக்ஷி சுந்தரம் பிள்ளையை அக்காலத்தில் தெரியாதவர் கிடையாது. இந்தியாவிலேயே இவரது புகழ் பரவியது. நாதஸ்வர மன்னர் திரு இராஜரத்தினம்பிள்ளையவர்களுக்கே தவில் தவாசித்தவர் என்றால் மேலதிகமாக ஏதும் சொல்ல வேண்டுமா? நான் பதினெரு வயதுச் சிறுவனயிருந்த காலத்தில் என்னுடைய பாட்டுக்கச்சேரியில் இப் பெரியார் பக்கவாத்தியமாக கஞ்சிரா வாசித்த பாக்கியம் கிடைத்தது.

சங்கீதகலாநிதி பொன்னையா பிள்ளையவர்களால் சோமசுந்தர பாரதியின் முன்னிலையில் யாழ் நகரில் காமாக்ஷி சுந்தரத்தைக் கௌரவிக்கும் முகமாக தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது. இவருடைய சிஷ்யர்களில் ஒருவரே இன்று எங்கள் மத்தியில் புகழுடன் விளங்கும் திரு. தட்சணமூர்த்தி.

அடுத்து, சங்கீத வித்துவான் புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்களையும், புத்துவாட்டி இரத்தினம் அவர்களையும் நாம் நினைவு கூர வேண்டும். புத்துவாட்டி சோமு அவர்கள் சிறந்த வயிலின் வித்துவான் மட்டுமின்றி கர்நாடக சங்கீத சாஸ்திர அறிவும். நிறையப் பெற்றவர் அவரிடம் பயின்ற மாணவர்கள் பலர்.

கர்நாடக இசையை ஈழத்தில் பரப்பிய பெருமை இவருக்குப் பெரும்பாலும் சேரும் புத்துவாட்டி இரத்தினம் அவர்கள் சிறந்த மிருதங்க தபலா வித்துவானக விளங்கினலும் நாதஸ்வரமும் வாசித்திருக்கிறார் என அறிகிறேன். இவர் நாடகத் துறையில் பெரும் ஊக்கம் காட்டியுள்ளார். அடுத்தபடியாக ஸ்ரீமதி சுப்புக்குட்டி அம்மாளை நாங்கள் மறக்கலாகாது. இவர் ஒரு சிறந்த பாடகியாக விளங்கினரென எனது தகப்பனர் அடிக்கடி கூறியதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இவர் மாவிட்டபுரத்தைச்சேர்ந்தவர்.

### முதல் முதல் கதாப்பிரசங்கம்

கதா காலட் சேப வித்துவான்கள் மூன்று பேர் சிறந்து விளங்கினர். இதில் சங்கரசுப்பைய சுவாமிக்கு முதலிடம் வழங்கவேண்டும். இவரே யாழ்ப்பாணத்தில் முதல் முதல் கதாப்பிரசங்கம் செய்துள்ளார். கொழும்பிலும் ஒவ்வொரு ஞாயிறு இசை நிகழ்ச்சிகள் நடாத்திவந்துள்ளார். இவரைப் பிற்காலத்தில் சச்சிதானந்த யோகீஸ்வரர் என அழைத்தனர். இரண்டாவது கதாப்பிரசங்க வித்துவானின் பெயர் மாணிக்கத் தியாகராஜர். மூன்றாவதாக நாகலிங்கப் பரதேசியார் என்ற கதாப்பிரசங்கியார் சங்கானையில் வசித்துள்ளார். இப்பெரியார் தேவாரங்களைப் பண்முறைப்படி பாடினார் எனத்தெரியவருகிறது.

சங்கீதத் தொழிலை ஒரு இழிவான தொழிலாகக் கருதிய மனப்பான்மையை ஒழிக்க முதன் முதலாக முன் வந்த பெருமை காலம் சென்ற கலைப் புலவர் நவரத்தினம் அவர்களின் பாரியார் திருமதி மகேஸ்வரி நவரத்தினத்திற்கே உரியது. 1924-ல் இவர் விவாகம் செய்ய முன்னமே செல்வி மாசிலாமணி என்ற பெயருடன் யாழ்-மத்திய கல்லூரி மண்டபத்தில் துணிவுடன் வீணைக் கச்சேரி செய்துள்ளார். அதை அடுத்தடுத்த நாட்களில் கையொப்பமிடப்படாத கேவலமான கடிதங்கள் பல இவருடைய தகப்பனருக்குக் கிடைத்துள்ளதாம். அதாவது சைவ சமயத்திற்கும், யாழ்ப்பாணப் பெண்களின் மானத்திற்கும், தமிழர் சமூகத்திற்கும் பங்கம் விளைவித்ததாகக் கூறினராம். இதிலிருந்து அக்காலத்தில் இசைக்கிருந்த 'மதிப்பை' அறிந்துகொள்ளலாம். 1928-ல் ஈழநாட்டில் முதலாவது சங்கீத சபை ஸ்தாபிக்கப்பட்டது. இதன் பெயர் சங்கீத சமாஜம். 1930-ல் நுண்கலைகளுக்கும் தமிழிலக்கியத்திற்கும் புத்துயிர் கொடுக்கும் நோக்கமாகக் கலா நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபையே முதலாவது கர்நாடக சங்கீத நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு வைபவத்தை நடத்தியது. 1931-ல் ஸ்ரீமதி மகேஸ்வரி நவரத்தினம் இந்திய சங்கீதத்தைப்பற்றி சிறிய புத்தகம் ஒன்றை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து "வீணை உபாத்தியாயர்" என்னெரு புத்தகத்தையும் வெளியிட்டார். இதனல் ஈழநாட்டில் கர்நாடக சங்கீதத்தின் மறுமலர்ச்சியைக் கொண்டுவந்த பெருமை இவ்வம்மையாருக்குப் பெரும்பாலுமுண்டு. இவரது அன்புக் கணவன் அண்மையில் காலம் சென்ற கலைப் புலவர் நவரத்தினம் அவர்கள் சங்கீத வித்துவானக விளங்காவிடினும் கர்நாடக இசையைவளர்ப்பதில் பெரும் ஊக்கம் கொண்டிருந்தார்.

இந்த இசைக்கு எமது நாட்டில் சுவாமி விபுலானந்த அடிகள் செய்துள்ள சேவைகளையும் நாம் மறக்கலாகாது. "சிறந்த உரை நடை வன்மையும் செய்யுள் இயற்றும் ஆற்றலும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற விபுலானந்தஅடிகள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஆராய்ந்து பல அரிய கட்டுரைகளை எழுதி உதவியதோடு மதங்கசூளாமணி, யாழ் நூல் என்பவற்றை எழுதியுள்ளார். பல நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்த தமிழரின் பண்டை இசைக் கருவிகள், பண் முறை முதலியவற்றைப் பல நூல்களின் உதவிகொண்டு ஆராய்ந்து தமிழுலகிற்கு வெளிப்படுத்திய பெருமை அடிகளுக்கே உரியது."

எமது நாட்டில் கர்நாடக இசையின் வளர்ச்சியைப்பற்றிப் பேசும்போது வட இலங்கைச் சங்கீத சபையையும், அதன் ஸ்தாபகராகிய எனது தகப்பனர் எம். எஸ். பரம்அவர்களையும் நாம் நினைவுகொள்ளாமல் இருக்கமுடியாது. 1935-ல் ஸ்தாபிக்கப்பட்ட இச்சபை இற்றைவரை சிறந்த தொண்டாற்றிவருகிறது. பள்ளிக்கூடங்களில் கர்நாடக இசையை ஒருபாடமாக்கிய பெருமை இச்சபைக்கே உரியது. எனது தகப்பனர் அரசாங்கத்தால் கல்லூரிகளில் கௌரவ சங்கீத மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுப் பல வருடங்கள் கடமையாற்றிவந்தார். அப்பொழுதிருந்த கோப்பாய் ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியில் சங்கீத விரிவுரையாளராகவும் இருந்தார். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீதக் கலாநிதி திரு. சபேசையர் இசைப் பேராசிரியராக இருந்த காலத்தில் எனது தகப்பனர் இந்தியாவில் நடந்த தமிழிசை மகாநாட்டில் தலைமை தாங்கி எமது நாட்டிற்கு பெருமையையும் புகழையும் அளித்தார். சில வருடங்களிற்குமுன் வருடா வருடம் வட இலங்கை சங்கீத சபை கோடைகால சங்கீத வகுப்புக்களை மூன்று மாதங்களுக்கு நடத்தித் தராதரப் பத்திரங்களும் வழங்கியது. இக் கல்லூரியின் அதிபராக சங்கீதக் கலாநிதி சபேசையர், சங்கீதக் கலாநிதி பொன்னையாபிள்ளை, சங்கீதக் கலாநிதி முசுரி சுப்பிரமணி ஐயர், சங்கீதக் கலாநிதி மருங்காபுரிக் கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் இருந்திருக்கின்றனர். மற்றும் திருச்சி சகோதரர்கள் எஸ். பாலசுப்பிரமணிய ஐயர். எஸ். துரைசாமி ஐயர், எஸ். சுந்தரேச ஐயர் ஆயோரும் ஆசிரியர்களாக இருந்தனர். எனது தகப்பனரிறந்த பின துரதிர்ஷ்டவசமாக இவ்வகுப்புகள் நடைபெருது நிறுத்தப்

(5-ம் பக்கம் பார்க்க)

### இசைத் தொண்டு

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபையார் சென்ற 11ஆண்டுகளாக இங்கு இசை விழாவை நடத்தி இசை வளர்ச்சிக்கு மேலான தொண்டு செய்து வந்திருப்பது நன்றியுடன் பாராட்டத்தக்கதாகும். இடையே பல சோதனைகள் ஏற்பட்டும், அவற்றையெல்லாம் வென்று, கலைஞர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தி, மேலான இசைத்தொண்டுசெய்து வருவது பெரிய காரியம்.

யாழ்ப்பாணத்தில் இன்றுள்ள இசையாளரில் முன்னணியிலுள்ளவர்கள் தமிழ்நாடு சென்று இசை பயின்றவர்கள். ஆனல் இனி அவ்வித வாய்ப்பு புதிய சட்ட திட்டங்களால் கிடைப்பது அரிதாகையால், இலங்கையிலேயே ஒரு நல்ல இசைக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டிய அவசியமும் அவசரமும் அதிகமாகும். இதற்கான முயற்சியை, ரஸிகரஞ்சன சபையாரும், இசைவளர்ச்சியில் அக்கறைகொண்டுள்ள மற்ற ஸ்தாபனங்களும் கூட்டாகச் செய்ய முன்வர வேண்டும். அந்தக் கோரிக்கையை அரசாங்கம் அலட்சியம் செய்ய முடியாது.

ஜயாறன் எழுதுவது



இன்று சுவாமி ராமதாஸ் அவர்களின் 78-வது ஜயந்தி. சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பாக அவரும் அன்னை கிருஷ்ணபாயும் உலகயாத்திரை சென்று திரும்புகையில் இலங்கைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வந்ததையும் பல கூட்டங்களில் சுவாமி அவர்கள் அருளுபதேசம் செய்ததையும் பலரும் அறிவர்.

மங்களூருக்குப் பக்கத்திலே ஆனந்த ஆசிரமம் அமைத்து, மேலான தொண்டு செய்து வரும் சுவாமிக்கு சமீபத்தில் உடல் நலம் குன்றி இருந்தது. 7 கோடி நாம ஜெபம் செய்யுமாறு அன்னை வேண்டுகோள் விடுத்திருந்தார். இதுவரை 25 கோடிக்குமேல் நாமஜெபம் செய்யப்பெற்றுள்ளதாம். இதன் பயனுக, சுவாமியின் உடல் நிலை நல்ல குணமடைந்துள்ளதாக, ஆசிரமத்துக்குச் சமீபத்தில் சென்று திரும்பிய அன்பர் ஜோதி தெரிவிக்கிறர்.

* * *

தெய்வம் ஒவ்வொருகணமும் தமக்கு எப்படித்துணை நிற்கின்றதென்பதைக் குறித்து அவர் தமது சொந்த அனுபவங்களைப் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளார்கள். பூப்பிரதட்சணம் செய்து திரும்பிய பின், "உலகமே கடவுள்" என்ற நூலை எழுதியுள்ளார். ஆங்காங்கு அவர் செய்த பிரசங்கங்களும், கேள்விகளுக்கு அளித்துள்ள பதில்களும் புத்தகங்களாக வெளிவந்து, உலகில் பலருக்கும் நல்வழி காட்டி வருகின்றன. சுவாமியும் அவரது அருட்தொண்டுகளும் நீடூழி வாழ்க!

*

ஓர் அன்பர் சுவாமி ராமதாஸிடம் வந்து, தாம் வேலை செய்யும் காரியாலயத்திலே பலரும் தம்மை மோசமாக நடத்துவதாயும் அதனல் தம் மனம் வேதனைப்படுவதாயும் கூறினர். கடவுளின் பெயரை இடைவிடாது தொடர்ந்து ஜபம் செய்யும்படி அந்த அன்பருக்குச் சுவாமி யோசனை கூறி, எல்லாம் சரியாகிவிடுமென்று உறுதி அளித்தார்.

அந்த அன்பரும் சுவாமியின் பேச்சை நம்பி, ஆண்டவனின் திருநாமத்தை பக்தியுடனும் நம்பிக்கையுடனும் ஜபம் செய்து வந்தார். சில நாட்கள் கழித்து அதே அன்பர் சுவாமியிடம் வந்து, இப்போது காரியாலயத்திலுள்ள சகாக்கள், நல்லவர்களாகவும் தமது நண்பர்களாகவும் மாறிவிட்டதாயும், தாம் வெகு சந்தோஷமாக இருப்பதாயும் தெரிவித்தார்!

சுவாமி ராமதாஸ்:- "முன்னர் அவர்களெல்லாம் ஏன் கெட்டவர்களாக உங்களுக்குத் தோன்றியது தெரியுமா? உங்கள் மனதில் அழுக்கு இருந்தது நீங்கள் அவர்களை வெறுத்தீர்கள். வெறுப்புக்கு பதில் வெறுப்பே உங்களுக்குத் திருப்பிக் கிடைத்தது.

(2-ம் பக்கம் பார்க்க)

# ஈழத்தில் கர்நாடக...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. இப்பொழுது சங்கீதப் பரீட்சைகளை நடத்தி மாணவர்களுக்கு பெரும் ஊக்கம் அளித்துவருகிறது. இதனால் வழங்கப்படும் ஆசிரியர் தராதரப் பத்திரம் கல்வி இலாகாவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சி ஏற்பட்டதன் பின் பல சங்கீத வித்துவான்கள் இருந்தாலும் தாய் நாடாகிய இந்தியாவிலுள்ள உயர்தர வித்துவான்களுடன் ஒப்பிடமுடியுமா என்ற கேள்வியை நாம் கேட்டால் எனதபிப்பிராயப்படி இல்லையென்றே கூறவேண்டும். இதற்குப் பல காரணங்களுண்டு. ஆனல் எங்கள் நாட்டிலுள்ள நாதஸ்வர வித்துவான்களின் தரத்தை ஆராய்ந்தால் இந்தியாவிலுள்ள காரைக்குறிச்சி, பிச்சையப்பா, நாமகிரிப்பேட்டை, வேதமூர்த்தி, மௌலானா சாஹிப் ஆகியோரைத் தவிர்த்தால் மற்ற எந்த வித்துவான்களுடனும் சரிநிகர் சமானமாகப் பார்க்கலாம் என்பது எனது அபிப்பிராயம். சமீபத்தில் நாதஸ்வர வித்துவான் திருநாவுக்கரசு அவர்கள் சடுதியாக மரணம் அடைந்தது எங்கள் சங்கீத உலகிற்கு பெரும் நஷ்டம். தவில் வித்துவான் திரு. தட்சணாமூர்த்திப்பிள்ளை அவர்கள் ஈழநாட்டிற்குப் பெரும் புகழை ஈட்டியுள்ளார். இந்தியாவிலேயே இன்று அவருக்கு நிகராக ஒரு சிலரே இருக்கிறார்கள். கடந்த இரு வருடங்களாக சென்னையில் நடந்துகொண்டிருக்கும் இசை விழாக்களில் காரைக்குறிச்சிக்குப் பக்கவாத்தியமாகத் தவில் வாசித்துள்ளார். இவரைப்போல் சில வருடங்களுக்குமுன் குமுக்கா கணபதிப்பிள்ளை அவர்கள் பெரும் தவில் வித்துவானாக விளங்கினார். இப்போது முதிர்ந்த வயதில் கஞ்சிரா வித்வானாக விளங்குகிறார். வேய்ங்குழல் வித்துவான். ஆர். மூர்த்தி ஐயர் அவர்களுக்கும் வீணை வித்துவான் காலம் சென்ற கே. சண்முகம்பிள்ளை அவர்களும் கர்நாடக இசைக்கும் பெரும் தொண்டாற்றியுள்ளனர்.

கல்லூரிகளில் இசையாசிரியர்களை நியமிக்கத் தொடங்கியதன் பின் பலர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், கலாக்ஷேத்திரம், கர்நாடக சங்கீதக்கல்லூரி ஆகிய இடங்களிற் சென்று சங்கீதத் தராதரப் பத்திரங்களைப் பெற்று வருகின்றனர். ஆனல் இங்குள்ள வித்துவான்களின் பெயரும் குறையாதெனின் போதிய பாடாந்தரம் இல்லாததே. ஒரு வித்துவானுக்கவசியம் தெரியவேண்டியது பல வர்ணங்கள், ஸ்வரஜதிகள், ஜாவளிகள், பதங்கள், ஏராளமான கீர்த்தனங்கள், அதிலும் முக்கியமாக மும் மூர்த்திகளாய தியாகையர், தீட்சிதர், ஸியாமா சாஸ்திரி ஆகியவர்களினதும் முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதி, கவிக் குஞ்சிரதாஸர், பாபநாசம்சிவன் ஆகியோரினதும், முக்கியமாகத் தியாகையர் பஞ்சரத்தின கீர்த்தனங்களும், தீட்சிதரின் நவாவர்ணக் கீர்த்தனங்களும் அதோடு தேவாரங்கள் திருப்புகழும் தெரிய வேண்டும். இப்படியாகப் பார்க்குமிடத்து எங்கள் மத்தியில் இவ்வளவு பாடாந்திரம் உள்ளவர்கள் இருக்கின்றனரா என்பது சந்தேகம். எங்கள் நாட்டில் சங்கீத வித்துவான்கள் முன்னேறுவதற்கு இதுவரை காலம் போதிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். கர்நாடக சங்கீதத்தை ரஸிக்கக்கூடிய அளவிற்குப் பொதுமக்களிடத்துப் போதிய இசை ஞானம் இல்லை சுதந்திரம் கிடைத்த பின்னர் பெருமளவும் பரவி வருகிறதென்றாலும் இந்தியாவிலுள்ள நிலையை நாம் இன்னும் அடையவில்லை என்றே கூறவேண்டும். எங்கள் நாட்டில் கர்நாடக இசை பரவவேண்டுமானல் இந்தியாவிலிருந்து அடிக்கடி பல உயர்தர வித்துவான்கள் வந்து போகவேண்டியதவசியம். இப்போது இங்கிருந்து மாணவர்கள் இந்தியா சென்று சங்கீதம் படிப்பதற்கு இலங்கை அரசாங்கம் பல இடையூறுகளைக் கொடுப்பது மிக வருந்தத்தக்கது. அது மட்டுமல்லாமல் இந்தியாவிலிருந்து சங்கீத வித்துவான்களை ஏன் வரவழைக்க வேண்டுமென ஒரு கூட்டத்தினர் கூறுவது குறுகிய மனப்பான்மை. ஆனல் மட்டரகமான சங்கீத வித்துவான்கள் இந்தியாவிலிருந்து பிழைப்பிற்காக இங்கு வருவதைத் தடை செய்ய வேண்டியது அவசியமே.

நமது நாட்டில் எல்லாப் பாகங்களிலும் சங்கீத சபைகள் ஸ்தாபிக்கவேண்டியதவசியம். ரஸிக ரஞ்சன சபா, சங்கீத வித்வத் சபை, சங்கீத நாட்டிய சங்கம், கலைக்கழகம், சைவ மங்கையர்க் கழகம், அண்ணாமலை இசைக்கலை மன்றம் ஆகியவை செய்து வரும் தொண்டு போற்றத்தக்கது. ஆனல் இசைக் கல்லூரிகள் போதியளவு இல்லை என்றே கூறவேண்டும். கர்நாடக இசை செம்மையாக வளரவேண்டுமானல் சங்கீத வித்துவான்களுக்கு அடக்கமும், ஒழுங்கும் அவசியம் தேவை. சங்கீத ஞானம் பெருகப் பெருக மேலும் அதை வளர்க்கும் ஆற்றலிருக்க வேண்டும். எங்கள் நாட்டில் பலரும் பயிற்சிக்குப் புள்ளி போட்டுப் புகழை நாடுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர்!

**கலைஞனைக் கௌரவிக்கும் முறை**

எங்கள் நாட்டில் இன்னும் ஒரு வருந்தத்தக்க விஷயம் கலைஞனைக் கௌரவிக்கும் முறை. இந்தியாவில் பொன்னாடையோ, பொற்கிழியோ வழங்கப்படுவதென்றால் அதைப் பெறுபவன் நிறைந்த ஞானமுடையவராகவும், இனிமேல் அவரால் உழைக்க முடியாத நிலை ஏற்பட்டதும் அவரை கௌரவிக்கும் முகமாகவும், பிற்கால சீவியம் பொருளாதாரக் கஷ்டமின்றி இருக்க உதவும் நோக்கமாகவும் செய்யப்படுகிறது. ஆனல் இதற்கு முற்றும் மாறாக இங்கு நடப்பதை யாவரும் அறிவர்.

ஈழத்தில் கர்நாடக இசை என்னும் போது கதாப்பிரசங்கத்தின் நிலையையும் ஆராய வேண்டியது அவசியம். இந்தியாவைவிட இலங்கையில் இக்கலைக்குக் கூடிய மதிப்புண்டு என்றால் மிகையாகாது. முன் கூறியபடி சங்கரசுப்பையர்சுவாமிகள் ஆரம்பித்து வைத்த கதாப்பிரசங்கம் இன்று நகநாட்டில் உச்ச நிலையை அடைந்திருக்கிறதெனலாம். ஈழத்தில் எந்தப் பாகத்திலும், கோவில் திருவிழாக்களில் இது முக்கிய இடம் பெறுகிறது. இன்று பலர் இத்துறையில் ஈடுபட்டிருக்கின்றனர். இதில் முதலிடம் வகிப்பவர் வி. என். எஸ். மணிபாகவதர் அவர்கள். இவர் புகழ் இந்தியாவிலும் மலேயாவிலும் பரவியுள்ளது. யாழ்ப்பாண நந்திகேஸ்வர நாட்டியாலய அதிபர் திருமதி நீலா சத்தியலிங்கம் அவர்களும் அவரது அன்புக் கணவர் சீத்தியலிங்கம் அவர்களும் 1960ல் சென்னை மியூஸிக் அக்கடமியில் நடன நிகழ்ச்சி நடாத்தி ஈழத்திற்குப் புகழீட்டினர். அதேபோல் சென்ற வருடம் செல்வி திரிபுரசுந்தரி குமாரசுவாமி மதராஸ் நுண் கலைச்சங்கத்தில் நடனவிருந்தளித்து ஈழத்து மக்களுக்குப் புகழைத் தந்தார். இவர்களைப்போல் இங்குள்ள சங்கீத வித்துவான்களுக்கும் அந்த வாய்ப்புக் கிடைக்க வேண்டும்.

---

## உடல் வலிமை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டுக்கழகத் தலைவர் திரு. சி. பாலசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். காந்தி, நேரு இல்லங்கள் விளையாட்டுப்போட்டியில் ஈடுபட்டன. காந்தி இல்லம் 201 புள்ளிகளையும், நேரு இல்லம் 178 புள்ளிகளையும் பெற்றன. காந்தி இல்லம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. சாம்பியன் விபரம் வருமாறு:

அதி மேற்பிரிவு: எஸ். கனகராசா, மேற்பிரிவு: எஸ். சிவஞானம், மத்திய பிரிவு: கே. தியாகராஜா, கீழ்ப்பிரிவு: எஸ். கருணானந்தமூர்த்தி, பாலர் பிரிவு: எஸ். சிவலிங்கம்.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி மார்க்கண்டன் பரிசுகளை வழங்கினார்.

---

## உதவி ஸ்தானிகர் தடுப்பு முகாமை பார்வையிட்டார்

மன்னார், புதன்

மன்னாருக்கு உத்தியோக பூர்வாக விஜயம் செய்திருந்த இலங்கையிலுள்ள இந்திய உதவி ஸ்தானிகர் திரு. ஆர். ஆர். மணி தலைமன்னாரில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை காவலில் வைத்திருக்கும் தடுப்பு முகாமை பார்வையிட்டார்.

திரு. மணி திருக்கேதீஸ்வரத்துக்கும் விஜயம் செய்தார்.

---

## எட் பெரேரா விடுதலை

கொழும்பு, புதன்

1958-ல் 10 வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட எட் பெரேரா விடுதலை பெற்றுள்ளார்.

900 ரூத்தல் நிறையுள்ள கஞ்சா கடத்தலில் ஈடுபட்டதாக பெரேரவுக்கு 1958-ல் சிறைத்தண்டனை விதிக்கப் பெற்றது. அச்சமையம் சுங்க அதிகாரியாக கடமையாற்றிய திரு. எம். சந்திரசோமா முதலில் திரு பெரேராவுக்கு 400,000 ரூபாய் அபராதம் விதித்தார்.

---

## 2 சிமெந்து தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் நிறுவப்படும்

சென்னை, ஏப். 17

தமிழ்நாட்டில் மேலும் இரண்டு சிமெந்துத் தொழிற்சாலைகள் நிறுவப்படவிருக்கின்றன. ஒன்று சேலத்திலும் மற்றது திருச்சியிலும் நிறுவப்படுமென்று தமிழ் நாடுதொழில் துறை அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது ஆண்டவன் திருநாமத்தால் உங்கள் மனம் பரிசுத்தமாயிற்று. அதனால் நீங்கள் அவர்கள்பால் அன்பு கொள்ள முடிந்தது. இதன் பயனாக உங்களுக்கும் அன்பு அமோகமாகக் கிடைத்தது. மனம்போலவே மாங்கலியம். இது வெறும் வாட்டுத் தத்துவமல்ல அனுபவ உண்மையாகும்."

நமது விரோதிகளையும் நண்பர்களாக மாற்றிக்கொள்ளும் ரகசிய மருந்து இதுவல்லவா?

* * *

விறகில் தீயினன்
பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன்
மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு
உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக்
கடைய முன்னிற்குமே.
—திருநாவுக்கரசர்

---

# "நல்ல கல்வியினால்தான் மதுபானத்தை ஒழிக்கலாம்"

## சர்வதேச மது ஒழிப்பு கமிஷன் பிரதிநிதி அறிவுரை

கொழும்பு, புதன்

அரசியல் வைபவங்களில் மதுபானம் வழங்கும் பழக்கத்தைக் கைவிடுவதென இலங்கை அரசகங்கமும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் செய்துகொண்டுள்ள தீர்மானத்துக்காக இலங்கை அரசாங்கத்தையும் பிரதமரையும் தாம் பெரிதும் பாராட்டுவதாக சர்வதேச மதுபான ஒழிப்பு கமிஷனின் பிரதிநிதி திரு பிரான்ஸிஸ் சோபர், 'கால்பேஸில்' நடைபெற்ற பத்திரிகை மகாநடொன்றில் கூறினார்.

சகல நாடுகளிலுமுள்ள மதுபான ஆராய்ச்சி நடத்துமுகமாகத் திரு. சோபர் உலகம் சுற்றி வருகிறார்.

இந்தியாவிலிருந்து இலங்கை வந்து சேர்ந்த இவர் நேற்று இலங்கையை விட்டுச் சென்றார். இந்தியாவில் கல்கத்தா, டில்லி பட்னா, பம்பாய், பெங்களூர், சென்னை ஆகிய இடங்களுக்குச் சென்ற இவர் அங்குள்ள மதுபான ஒழிப்பு இயக்கத்தை பெரிதும் பாராட்டினார்

கள்ளமாக மதுபானம் வடிசெய்வது பற்றியும் மதுபானம் கள்ளக்கடத்தல் செய்வது பற்றியும் தேவைக்கு அதிகமாகவே பத்திரிகைகள் பிரசுரிப்பதாக அவர் கூறினார்.

நல்ல அறிவூட்டுவதால்தான் மதுபானம் அருந்தும் பழக்கத்தை ஒழிக்கலாம். இளமையிலேயே மக்களுக்குப் புத்தி புகட்டுவது அவசியமாகின்றது பிரான்சு தேசத்தைப் பொறுத்தவரை இந்த உண்மை புலனாகின்றது எனத் திரு. சோபர் கூறியுள்ளார். மதுபானத்தைப் பெருமளவிற்கு அருந்திவந்த பிரான்சிய மக்களிடையேகல்வி பரவியதும், அப்பழக்கம் குறைந்து வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

---

## ஆசிரியரின் உருவப்படம்

### எஸ். ஜே. வி. திரை நீக்கம்செய்து வைத்தார்

தெல்லிப்பழை, செவ்வாய்

'இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த தலைமையாசிரியர்களில் மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் திரு. துரையப்பாபிள்ளை முற்போக்கானவராக விளங்கினார். அக்காலத்தில் அமெரிக்க மிஷன் பள்ளிக்கூடத்தில் ஏழாம் வகுப்பு வரை தான் படிப்புச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. திரு. துரையப்பா அக்காலத்தில் ஏழாம் வகுப்புப்படித்த ஆறு மாணவர்களுக்குக் கல்வி போதித்து கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சைக்குத் தோற்று வித்தார். அத்தகைய சிறந்த கல்வியான் பல கஷ்டங்களுக்கிடையே நிறுவிய இக் கல்லூரி பெயருக்கேற்ற முறையில் பொதுமக்கள் கல்லூரியாகமாறிவிட்டது.'

காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆசிரியர் திரு. அ. கந்தையாவின் உருவப்படத்தைத் திரை நீக்கஞ் செய்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:-

பாடசாலைகளை அசாங்கம் கையேற்றபின் பாடசாலை வளர்ச்சியில் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் அக்கறை எடுக்க வேண்டுமா? என்ற பிரச்சனை தோன்றியுள்ளது. பாடசாலைகளை அரசினர் கையேற்ற போதிலும் இது பொது மக்களுக்குரிய பாடசாலை. எனவே குழந்தைகளின் எதிர்கால நலனை முன்னிட்டு அனைவரும் பாடசாலை வளர்ச்சியில் அக்கறை எடுக்க வேண்டியது அவசியமாகும். இக் கல்லூரி நிறுவப்பட்ட காலத்திலே ஆசிரியாகள் பல தியாகங்கள் செய்ய வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் பாடசாலையில் கொண்டிருந்த அபிமானம் காரணமாகவே பாடசாலைக்காக எதனையும் செய்யச் சித்தமாக இருந்தனர். தற்போது ஆசிரியர்களிடம் பாடசாலை அபிமானம் என்பதனைக் காண்பது அரிதாக இருப்பது கவலைக்குரியது."

வழக்கறிஞர் திரு. எம். சிதம்பரநாதன், திரு. தி. கார்த்திகேசஐயரும் பேசினர். ஆசிரியர் திரு. அ. கந்தையா தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

---

## அல்ஜீரியாவில் நேற்று 49 பேர் பலி

அல்ஜீரியர்ஸ், ஏப் 17

அல்ஜீரியாவில் இரகசியராணுவஸ்தாபனத்தினரின் பலாத்கார நடவடிக்கைகளினால் நேற்று 49 பேர் மாண்டனர். சுமார் 40 பேர் காயமடைந்தனர்.

கிழக்குஓரானிலும் அல்ஜியர்ஸ் நகரிலும் அல்ஜீரியர்கள் எதிர்த்துத்தாக்கினர்.

---

## 'நாங்கள் சமாதான.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் மத்திய கல்லூரியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:- "சமாதானத்தைக் காப்பாற்றாவிடில் உலகம் அழிந்துவிடும். மனிதருக்கு எதிராகத் தோன்றியுள்ள இம் மாபெரும் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம்? இதுதான், இன்று மக்களின் மனதில் குடிகொண்டிருக்கும் முக்கியமான கேள்வி. பேச்சு வார்த்தைகள் மூலம்தான் உலகில் சமாதானத்தை நிலைநாட்டலாம் என்பது இப்போது தெளிவாக தெரிகிறது. இதனுடன் மட்டுமின்றி மக்களிடையே வர்த்தக கலாச்சார விஞ்ஞான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் சமாதானத்தைக் காப்பாற்ற முடியும்.

சமாதானத்தைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ள நாடுகளிடையேயும் மக்களிடையேயும், சினேகிதத்தைப் பலப்படுத்துவதின் மூலம், சமாதான சகவாழ்வை நிலைநாட்ட முடியும். சோவியத் யூனியன், அன்றும் இன்றும் உலகின் சமாதானத்தையே விரும்புகிறது. தற்போதிருக்கும் நிலையில் படைக்குறைப்பு முக்கியமான ஒரு பிரச்சினையாக இருக்கிறது.

யுத்தம் என்றால் என்ன என்பதை நாங்கள் (சோவியத் மக்கள்) அறிவோம். இரண்டாவது உலக யுத்தத்தின் போது, எங்கள் நாட்டைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்கள் பலியாயினர். அத்துடன் மட்டுமின்றி, ஆயிரக் கணக்கான நகரங்களும், கிராமங்களும் பூண்டோடு அழிந்து போயின. ஏராளமான பொருட் சேதமும் ஏற்பட்டது. யுத்தத்தில் ஹிட்லரின் ஜெர்மனியை முறியடித்தன. மூலம், ஐரோப்பிய, உலக நாகரீகத்தைக் காப்பாற்றிய பெருமை ரஷ்யாவையே சாரும்."

# 'சேமிப்பு இயக்கங்களில் முதலீடு செய்க'

## சுதேசிய திருநாளில் அறிவுரை

யாழ்ப்பாணம், புதன்

"பெருந்தொகையான பணம் செலவழித்துப் புடவைகளை வாங்கிப் பெட்டிகளில் வைத்திருப்பதில் பயன் எதுவும் இல்லை. அதற்குப் பதில் சிறிதளவு பணத்தையேனும் சேமிப்பு இயக்கங்களில் முதலீடு செய்தால் எமது எதிர்காலம் பற்றி மனத் தைரியத்துடன் வாழலாம். சேமிப்பு இயக்கங்களில் பெண்கள் பெரிதும் பங்கு கொள்ள வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் தேசிய சேமிப்புப் பகுதியைச் சேர்ந்த திரு. பி. குமாரசிங்கம் புத்தாண்டு தினத்தன்று அரியாலை மக்கள் கொண்டாடிய சுதேசிய திருநாள் விழாவில் பேசுகையில் கூறினர். திரு. ஈ. கே. குமரையாவின் தலைமையில் நடைபெற்ற 42-வது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை அரியாலை மக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடினர்கள்.

தொடர்ந்து பேசுகையில் திரு. குமாரசிங்கம் கூறியதாவது:-

"ஒரு சமுதாயத்தில் செல்வந்தர் தொகை அதிகமாக இருந்தால் அது செல்வமுடைய சமுதாயமெனவும், வறியவர்கள் தொகை அதிகமாக இருந்தால் அது வறிய சமுதாயமெனவும் கொள்ளப்படுகிறது. பெரும்பான்மையினரைக் கொண்டே சமுதாயத்தின் செல்வ நிலை அளவிடப்படுகின்றது. சிறு வயதில் பெற்றோரின் அரவணைப்பில் வாழும் பிள்ளைகள் வளர்ந்த பின்னரே தமது பொறுப்புக்களை உணர்கிறார்கள். குடும்பப் பொறுப்புக்களை ஏற்கும்போதே பிற்காலத்துக்குத் தாம் சேமிக்க வேண்டும் என்ற புத்தி வருகிறது இந்த யோசனைகளைச் செயல் முறையிலும் கடைப்பிடிப்பார்களானல், அவர்களின் எதிர்காலம் கட்டாயம் வெற்றி பெறும்

தமிழர் சமுதாயத்தைச் சேர்ந்த நாம், மூன்று முக்கிய காரணங்களுக்காகச் சேமிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒன்று எமது பிள்ளைகளின் கல்விக்காக; மற்றையது எமது பெண் பிள்ளைகளை நல்ல நிலையில் வாழவிடுவதற்காக; மூன்றாவது எமது வயோதிப பருவத்தில் நாம் உடலால் உழைக்க முடியாத காலத்தில் எமது இருப்புப் பணத்தைக் கொண்டு சுயமரியாதையுடன் வாழ்வதற்காக.

எந்த அளவு குறைவான வருவாய் உள்ளவர்களும் சிறிதளவேனும் சேமிக்க வேண்டும். ஆடம்பர வாழ்க்கையையும் தேவையற்ற பழக்கங்களையும் கைவிட்டால் நாம் ஒவ்வொருவரும் சிறிதளவேனும் சேமிக்கலாம். தபால் கந்தோர்கள் மூலமாகவும், சேமிப்புப் பத்திரங்கள் மூலமாகவும், கச்சேரி தேசிய சேமிப்புக்கள் மூலமாகவும், அரசாங்க நிதிக் கடன் மூலமாகவும் சிறிதளவு பணமேனும் சேமிக்கும் வசதி எமக்குண்டு." விழாத் தலைவர் திரு. குமரையாவும், அரியாலை இளைஞர் விவசாயக் கழகக் காரியதரிசி திரு. ஆ. சண்முகநாதனும் சொற்பொழிவாற்றினர்கள். விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு திரு. எஸ். சோதிநாதன் பரிசுகளை வழங்கினர்.

பகல் முழுவதும் விளையாட்டுப் போட்டிகளும், இரவில் கலை விழாவும் நடைபெற்றன. விநோத உடைப் போட்டி, சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. சிறுவர் சிறுமியர் வயோதிபர்கள் வாலிபர்கள் பெண்மணிகள் எல்லோரும் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பேச்சுக்களும், நாடகப் போட்டிகளில் பரிசு பெற்ற "சீமைத்தம்பி", "யார் கதாநாயகி" என்ற இரு நாடகங்களும் அரியாலை ஐக்கிய நாடக மன்றத்தினர் நடித்த 'ராஜராஜ சோழன்' நாடகமும் கலைவிழாவில் இடம் பெற்றன.

---

## விடுதலைக்கு வித்திடும் நாடகங்கள்

### அவசியம் என்கிறார் கி. ச. தலைவர்

தெல்லிப்பழை, செவ்வாய்

"மனிதன் தனது உணர்ச்சிகளை நாடகங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றான். அப்படிச் செய்யும் போது மற்றவர்களுக்கும் அவன் உணர்ச்சியூட்டுகின்றான். தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்கும் விடுதலைக்கும் போராடுகின்ற சமயத்திலே படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் விடுதலை உணர்ச்சியூட்ட நாடகங்கள் பெரிதும் உதவும். இந்திய மக்கள் சுதந்திரப் போராட்ட காலத்தில் பல நாடகங்களை நடித்து மக்களுக்கு உணர்ச்சியையூட்டினர்.

இவ்வாறு மயிலிட்டி கிராம சபைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையில் யாழ்ப்பாணம் ஜெயசக்தி நாடகமன்ற ஆதரவில் நாடக விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:- தமிழ் மொழியின் முப்பிரிவுகளிலும் இயலும் இசையும் சேர்ந்து விளங்குவதினல் நாடகம் முதலிடம் பெறுகின்றது. உலகில் சினிமா வந்ததும் நாடகங்கள் மூலைகளில் ஒடுங்கின. ஆனல் இன்று பல இடங்களில் குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களில் நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டப்படுகின்றது"

---

### உத்தியோகஸ்தர்கள் தொகை கணக்கெடுப்பு

கொழும்பு, புதன்

அரசாங்க நிதிஉதவி பெற்று சம்பளம் வழங்கும் தாபனங்களில் வேலை பார்க்கும் சேவையாளர் தொகையை அரசாங்கம் கணக்கீடு செய்து வருகிறது. இந்த ஸ்தாபனங்களில் மேலதிகமானவர்கள் வேலை பார்த்து வருகிறார்களா என்று பார்வையிடுவதற்காகவே கணக்கெடுக்கப்படுவதாக அரசாங்க வட்டார அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

தமது இலாகாக்களிலுள்ள சேவையாளர் தொகையின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அனுப்புமாறு சகல அமைச்சுக்களின் நிரந்தரக் காரியதரிசிகளும் நிதியமைச்சரால் கேட்கப்பட்டுள்ளார்கள்.

---

### அகில இலங்கை சுற்றுப் பிரயாணம்

யாழ்ப்பாணம், புதன்

சித்தங்கேணியிலுள்ள நேருஜி சன சமூக நிலையத்தின் 30 அங்கத்தவர்கள் நிலையக் காரியதரிசி திரு. வே. கந்தசாமியின் தலைமையில் அகில இலங்கை முழுவதுமுள்ள புவியில் சரித்திரம், கலை சம்பந்தமான இடங்களைப் பார்வையிடும் நோக்கத்துடன் நேற்று அவர்களது நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்கள்.

---

### வருடப்பிறப்பன்று தாலிக்கொடி களவு

உடுப்பிட்டி, புதன்

அல்வாயைச் சேர்ந்த திருமதி சீவரத்தினம் வடிவேலு, அவரது தாயார் மனோன்மணி ஆகியோரின் இரு தாலிக் கொடிகளும் வருடப் பிறப்பன்று களவு போய்விட்டதன் எதிரொலியாக சின்னத்தம்பி கந்தசாமி, செல்லத்துரை ஈ. சுரபாதம் ஆகியோர் பருத்தித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாலிகளின் பெறுமதி ரூபா 1500 எனமதிப்பிடப்பட்டுள்ளது.

---

# 'கருவாடு விநியோகம் பற்றி விசாரணை நடத்துக'

## மந்திரிக்கு எம். பி கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

சிங்கள—தமிழ் புதுவருடப் பிறப்புக்கு முன்னதாகக் கருவாடு விநியோகம் செய்யப்பட்டது குறித்து ஒரு விசாரணை நடத்துமாறு பண்டாரவளை எம். பி. திரு. ஜே. ஜி. குணசேகரா வர்த்தக, உணவு, கப்பல் மந்திரியிடம் கேட்டுள்ளார்.

தமது தொகுதியில் தரம் கெட்ட கருவாடு விநியோகிக்கப்பட்டதாகவும் ஆனல் ஊவா மாகாணத்துக்கு நல்ல கருவாடு விநியோகித்ததாகவும் திரு. குணசேகரா முறையிட்டுள்ளார்.

கூ. மொ. வி. ஸ்தாபன அதிகாரிகளின் கவனக் குறைவினல் தமது தொகுதிக்கு நல்ல கருவாடு அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் வருஷப்பிறப்புக்கு எவ்வளவோ காலத்துக்கு முன்னதாகக் கிடைக்க வேண்டிய கருவாட்டுத் தொகை ஏப்ரல் 1-ம் திகதியன்றே பண்டாரவளைக்கு கிடைத்ததாகவும் திரு. குணசேகரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

"எமக்கு வரவேண்டிய கருவாட்டுத் தொகையை அனுப்பி வைக்கும்படி கூ.மொ.வி. ஸ்தாபன அதிகாரிகளிடம் கேட்டிருந்தபோதும், அத்தொகையை அவர்கள் அனுப்பிவைக்கவில்லை. எமக்கு வழங்கப்பட்ட கருவாடு மிகவும் பழுதடைந்திருந்தது. ஒரு எம். பி. என்ற அளவில் மட்டுமன்றி ஒரு மனிதப் பிறவி என்ற அளவில் அந்தக் கருவாட்டை நான் விநியோகிக்க விரும்பவில்லை. எஞ்சியிருந்த ஒரு லொறி நல்ல கருவாட்டை எமக்கு வழங்கியிருக்கலாம். ஆனல் அந்தக் கருவாடு கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. கருவாட்டு விநியோகங்களில் கூ. மொ. வி. ஸ்தாபன அதிகாரிகள் விஷம முறையில் நடந்துகொள்கிறார்கள் போலும்?

---

# துறைமுகத்தகராறு: விசாரணைக்கு புதிய ஏற்பாடு

கொழும்பு, புதன்

துறைமுகக் கார்ப்பரேஷனுக்கும் கார்ப்பரேஷன் தொழிலாளி எவருக்குமிடையே ஏற்படும் தகராறுகள், இத்தேவைக்கென நிறுவப்படும் தொழில் கோர்ட் ஒன்றின் முன்னரே இனிமேல் விசாரணைக்கு எடுக்கப்படும்.

பார்லிமெண்டில், தொழில் தேசிய சேவை மந்திரி திரு எம். பி. டி. சற். சிறிவர்த்தன சமர்ப்பித்த துறைமுகப் பகுதிச் சட்ட நகல்களில் இதுபற்றியும் கூறப்பட்டுள்ளது.

தகராறு தொழில் கோர்ட் ஒன்றின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படு முன்னர் தொழிலாளர் கட்சி விரும்பப்பட்டால் ஒரு தடவை கார்ப்பரேஷன் சபையை சந்தித்துப் பேசிக்கொள்வதற்கு சலுகை உண்டு.

தகராறுகளைத் தொழில் கோர்ட்டில் தீர்க்க விரும்புபவர்கள் புதிய சட்டம் அமுல் செய்ய ஆரம்பிக்கப்பட்ட முதல் மாதத்துள் கமிஷனருக்கு விண்ணப்பிக்கவேண்டும் எனத் தெரிகிறது.

---

### றேயல் கழகம் வெற்றி

தெல்லிப்பழை, செவ்வாய்

தெல்லிப்பழை றேயல் விளையாட்டுக் கழகத்திற்கும் நியூ ராஜா விளையாட்டுக் களகத்திற்கு மிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் றேயல் கழகம் ஒரு இனிங்ஸ் 38 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

றேயல் கோஷ்டி முதல் இன்னிங்சில் 99 ஓட்டங்கள் எடுத்தது. நியூராஜா முதல் இன்னிங்சில் 19 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 42 ஓட்டங்களும் பெற்றது.

---

### 99 பிள்ளைகளுக்கு சிவதீட்சை

ஊர்காவற்றுறை, செவ்வாய்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கரம்பொன் மேற்கு ஸ்ரீமுருகமூர்த்தி கோவிலில் அண்மையில் 99 பிள்ளைகளுக்கு சிவதீட்சை வைக்கப்பட்டது.

கரம்பொன் சைவமகாசபை ஆதரவில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வட்டார சைவ மக்கள் பலர் கலந்து கொண்டனர். நயினதீவு ஸ்ரீநாகபூஷனி தேவஸ்தான சிவஸ்ரீகைலாசநாதக்குருக்கள் சிவதீட்சையை நடத்திவைத்தார்.

---

### நாவலர், கணேசர் இல்லங்கள் வெற்றி

தெல்லிப்பழை, செவ்வாய்

வர்த்தலை விளான் வாலிபர் சங்கம் நடாத்திய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சகல போட்டிகளிலும் கணேசர் இல்லமும் நாவலர் இல்லமும் சமபுள்ளிகளைப் பெற்று இரு இல்லங்களும் சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றன. இப்போட்டிகளில் சம்பியன்களாக வெற்றியீட்டியவர்களின் விவரம் வருமாறு:

உயர்தர பிரிவு த.சாம்பசிவம், மேற் பிரிவு க. உமாமகேந்திரன், மத்திய பிரிவு த.மகாசிவம் சோ. லலிதா. கீழ்ப்பிரிவு தி. தியாகேஸ்வரன் ச. ஞானசோதி. சிறுவர்பிரிவு சீ. கருணேந்திரன், சி. சரோஜினிதேவி பாலர்பிரிவு செ. ஜெயராணி.

பேச்சுப்போட்டி, உதைபந்தாட்டப்போட்டி, என்பவற்றில் நாவலர் இல்லமும், கிரிக்கட் விளையாட்டுப் போட்டிகளில் கணேசர் இல்லமும் முதலிடத்தைப் பெற்றன.

---

### வர்த்தலை விளானில் 'போலியோ' நோய்

தெல்லிப்பழை, செவ்வாய்

வர்த்தலை விளானில் 'போலியோ' என்ற இளம் பிள்ளை வாதநோய் பரவுவது காரணமாக உடனடியாகத் தடுப்பு மருந்து இப்பகுதிக்கு அனுப்பி வைக்குமாறு சுகாதார அதிபருக்கு மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கேசன்துறையில் இளம்பிள்ளை வாதநோய் தோன்றியிருக்கிறதெனவும் அப்பகுதிக்கு இதுவரையும் தடுப்பு மருந்து வழங்கப்படவில்லையெனவும் திரு. ஸ்ரீபாஸ்கரன தனது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

---

### ஜா — ஊதாண்ட் சந்திப்பு

நியூயோர்க், ஏப்ரல் 17

தென் ரொடீஷியா சம்பந்தமாக ஐ. நா. கமிட்டிக்குத் தலைவராக லண்டன் சென்றிருந்த இந்தியப் பிரதிநிதி திரு. ஜாவும் பொதுக் காரியதரிசி திரு. யுதாண்ட்டும் சந்தித்துப் பேசினர்.

---

# இறக்கும் வரை உண்ணாவிரதம் இருப்பார்களாம்

## நோயாளிகள் எச்சரிக்கை

வத்தளை, செவ்வாய்

தமது முறையீடுகளுக்குத் தீர்வு வழங்கப்படாவிட்டால் தாம் சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்போவதாக ஹெந்தளை குஷ்ட நோய் ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் பயமுறுத்தியுள்ளார்கள்.

மழை நேரங்களில் ஆஸ்பத்திரி அனைத்தும் ஒழுக்கு விழுவதாகவும் தமக்குச் சரியான சிகிச்சை வழங்கப்படுவதில்லை எனவும் நோயாளிகள் முறையிட்டுள்ளார்கள்.

ஆஸ்பத்திரி உணவு தரங்குறைந்ததெனவும், மழை காலங்களில் நோயாளிகள் வராந்தாக்களில் படுத்துறங்குவதாயும் தெரிகிறது.

சமீபத்தில் ஆஸ்பத்திரிக்கு விஜயஞ்செய்து பார்வையிட்ட சுகாதார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி நோயாளரின் முறையீடுகளை விரைவில் நிவர்த்தி செய்வதாகக் கூறியுள்ளார்.

---

### புதிய சமாதான நீதிபதி

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறைப் பகுதிக்கு திரு. எம். யோகலிங்கம் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி கிராமசபை உபதலைவரான திரு. எம். யோகலிங்கம் சமூகத்தொண்டராவார்.

---

### அநாதைகள் விடுதிக்குப் புதிய கட்டடம்

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு நகர சபைப் பகுதியினர் 70,000 ரூபாய் செலவில் பம்பலப்பிட்டியிலுள்ள கட்டடமொன்றை அநாதைகள் மடம் நடாத்துவதற்கென வாங்கவிருக்கின்றனர்.

நகர சபையின் நிதிக் கமிட்டி தனது இறுதிக் கூட்டத்தில் செய்துகொண்ட தீர்மானத்தைத் தொடர்ந்து இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி ரிட்ஜ்வே பிளேஸிலுள்ள கட்டடமொன்றை 70,000 ரூபாய்க்கு வாங்கி கொழும்பு அநாதைகள் பராமரிப்பு விடுதியை அங்கு இடமாற்றஞ் செய்வதென ஆலோசிக்கப்பட்டுள்ளது.

---

### காங்கேசன்துறையில் மே தினம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண பிரதேசக் கிளை இவ்வாண்டு மே தினக் கொண்டாட்டத்தை காங்கேசன்துறையில் நடாத்துவதென முடிவுசெய்துள்ளது.

இக்கூட்டத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த கட்சிப் பிரமுகர்களும் கலந்துகொள்ளுவார்களெனத் தெரிகிறது.

# காங்கேசன்துறை மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய் காங்கேசன்துறை மாவட்ட மென்பந்து கிரிக்கட் விளையாட்டுச் சங்கத்தின் விசேட கூட்டமொன்று தலைவர் திரு. வி. சண்முகராசா தலைமையில் நடைபெற்றபோது முதலாவது வருடாந்த மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியை இம் மாதம் 28-ம் திகதி ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இச் சுற்றுப் போட்டிக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் இறுதிநாள் இம் மாதம் 21-ம் திகதியாகும். வடமாகாணத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளலாம். ஆனல் அக்கழகங்களைச் சேர்ந்த வீரர்களும் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவே இருத்தல்வேண்டும் என ஓர் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் விளையாட்டுக் கழகமும் தங்கள் விணணப்பப் பத்திரங்களில் 25 வீரர்களின் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். பதிவு செய்யப்படாத வீரர்கள் போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.

போட்டி 7 மணித்தியாலங்கள் வரை நீடிக்கும். காலை 9-00 மணி தொடக்கம் 12 மணி வரையும்; மாலை 2-00 மணி தொடக்கம் 6-00 மணிவரையும் நடைபெறும்.

இச் சுற்றுப்போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிக்கு ஓர் சலேஞ் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

---

## மனோகரா கோஷ்டி வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு வதிரி விளையாட்டுக்கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ்ட்டன் வெற்றிக் கோடய சுற்றுப்போட்டியில் 20 கழகங்கள் சேர்ந்துள்ளன இவை நாலு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் போட்டிகளும் ஆரம்பித்துவிட்டன.

கடந்தாண்டு வெற்றிவீரராகத் திகழ்ந்த வதிரி பஞ்ச் கோஷ்டியினரை அல்வாய் மனோகரா கோஷ்டி 2-1 ஆட்டங்களால்தோற்கடித்தது திரு கே. பரராஜசிங்கம் மத்தியட்சம் வகித்தார்.

---

## அராலி கொலை வழக்கு ஒத்திவைப்பு

யாழப்பாணம், புதன் அராலி வடக்கிலுள்ள மயிலப்புலத்தைச் சேர்ந்த ராமன் முத்தன் என்பவரை சென்ற வருடம் மே மாதம் 1-ந் திகதி கொலை செய்ததாக கணபதி நாகமணி, கணபதி கந்தையா, ஆறுமுகம் மார்க்கண்டு ஆகிய மூவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று வடமாகாண அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணை செய்யப்படாமலே ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையை இம்மாதம் 19-ந் திகதிவரை நீதியரசர் ஒத்திவைததபோது ஒரு எதிரி சார்பில் ஆஜரான திரு. கணேசலிங்கம் 19ம் திகதி சித்திராபறுவம் என்றும் பலருக்கு இந்திகதியன்று வர வசதிப்படாதென்றும், விசாரணையை வெள்ளியன்று நடத்தலாமென்றும் அபிப்பிராயம் தெரிவித்தார். நீதியரசர் வியாழக்கிழமை அரசாங்கவிடுமுறையில்லையென்றும் காலை 9-30 மணிக்கு விசாரணையைத்தொடங்கி பிற்பகல் 1-30 மணிக்கு தாம் முடித்துவிட உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

**வியாழன் 19-4-62**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-55 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 ரேடியோ டாக்டர், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல் வகை, 9-45 ஈஸ்ட்டர் விசேஷ நிகழ்ச்சி, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

**வியாழன் 19-4-62**

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ஏ. ராமகிருஷ்ணன் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கோமளவல்லி சுந்தரராஜன் — பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 ஏ. ராமகிருஷ்ணன — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 திருப்பாணழ்வார் ஹரிகதா (சென்னை அஞ்சல்), 8-40 திரைப்பட இசை, 9-15 மதுரகவி ஆழ்வார் பாசுரங்கள், 9-30 அகிலபாரத நாடக நிகழ்ச்சி.

---

கிரிக்கட்

## வெற்றி தோல்வியின்றி முடிவு

காங்கேசன் துறை, புதன் காங்கேசன் துறை ரேயல் விளையாட்டுக் கழகக் கிரிக்கட் கோஷ்டியும் தொண்டமனறு விளையாட்டுக் கழகக் கிரிக்கட் கோஷ்டியும் கலந்துகொண்ட கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

தொண்டமறை கிரிக்கட் கோஷ்டி முதல் இன்னிங்சில் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. ரேயல் கோஷ்டி முதல் இன்னிங்சில் 75 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. இரண்டாம் இன்னிங்சில் ரேயல் விக்கட் நஷ்டமேதுமின்றி 10 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. மழை காரணமாக போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. இப்போட்டி சிமெந்துத்தொழிற்சாலைமைதானத்தில் நடைபெற்றது.

---

## ஸ்புட்னிக் கழகம் வெற்றி

காங்கேசன் துறை, புதன் காங்கேசன் துறை ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகமும் சங்கானை விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்ட கைப்பந்தாட்டப்போட்டியில் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம் 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. கே. நடராசா நடுநிலைமை வகித்தார்.

## இலங்கைக்கு சீன அரிசி

கொழும்பு, செவ்வாய் முன்னர் செய்துகொண்ட சீன-இலங்கை ரப்பர்-அரிசி ஒப்பந்தப்படி மக்கள்சீன இலங்கைக்கு 85,000 தொன் அரிசியை வழங்கும்.

அடுத்த6 மாதங்களுள் இந்த அரிசியை சீன இங்கு அனுப்பிவைக்கும்.

அடுத்தமாதம் 10,000 தொன் அரிசி இங்கு முதலாவதாக இறக்குமதி செய்யப்படும். மிகுதி ஜூலை செப்டம்டர் அக்டோபர் ஆகிய மாதங்களில் இங்கு வந்து செரும்.

தமது நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டு பாடு காரணமாக தாம் முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறப் போவதில்லை என மக்கள்சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடப் தெரிவித்துள்ளது

சீன-இலங்கை ஒப்பந்தத்தின் படி வருடமென்றுக்கு 200,000 தொன் அரிசியை சீன இலங்கைக்கு அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# "சிறுபான்மைத் தமிழர் பிரச்னை பொருளாதாரப் பிரச்னையே!"

### உடுப்பிட்டி எம். பி. பேச்சு

உடுப்பிட்டி, செவ்வாய் "இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழரின் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையாகும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னலான முயற்சிகளை மேற்கொள்வேன்" என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்றிரவு கரவெட்டி மேற்கு "ஜன சக்தி" சனசமூக நிலையத்தில் பேசியபோது குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:-

பெரும்பான்மைத் தமிழருக்கும், சிறுபான்மைத் தமிழருக்குமிடையே நிலவும் சாதி வேற்றுமையை நான் வெறுக்கும் அதே நேரத்தில், சிறுபான்மைத் தமிழருக்கிடையே நிலவும், உயர்வு தாழ்வு மனப்பான்மையை மேலும் பலமாக நான் வெறுக்கிறேன். அவ்வித உயர்வு தாழ்வு மனப்பான்மையை ஒழித்துக் கட்டினல் தான் தமிழினம் தலை தூக்கி வாழ முடியும்.

ஆரம்பத்தில் திரு. பி. தம்பிமுத்து தலைமை தாங்கிய இக்கூட்டத்திற்கு. சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். அடுத்துப் பேசிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் சிறுபான்மைத் தமிழரிடையே நிலவும் குடிப் பழக்கம், வழக்குகள், சூதாட்டம் முதலியவற்றைக் கண்டித்துப் பேசியதுடன், இச்சமூகக் கேடுகளை ஒழிப்பதே ஒரு சிறந்த பொருளாதார வாழ்வுக்கு அடிப்படையாக அமையுமெனக் கூறினர்.

திருவாளர்கள் எம். கே. அந்தனிசில், கே. டானியல், கே. நாகமுத்து, நாகராஜா ஆகியோரும் பேசினர்.

---

டாக்கா, ஏப்ரல் 17 டாக்கா பல்கலைக்கழக வகுப்புக்கள் அடுத்த மாதம் 31-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. வகுப்புக்களை நடக்க விடாமல் மாணவர்கள் நேற்றுத் தடுத்ததைத் தொடர்ந்து புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.




உங்கள் குடும்பத்துக்கே ஏற்றது




குழந்தைகள் ஸல்லை கடைசித் துளிவரை விடாமல் பருகுகிறார்கள். ஏனென்றல் அதன் பாலாடையின் மிகுந்த தித்திப்பு சுவையை அவர்கள் விரும்புகிறார்கள்!

பெரியவர்களும் கூட ஸல்லைப் பெரிதும் விரும்புகிறார்கள். அவர்கள் அதை வெறும் பால் பானமாகப் பருகுகிறார்கள் அல்லது பாலுக்குப் பதில் டீயுடனே, கோப்பியுடனே, சேர்த்து அருந்துகிறார்கள்.

உங்கள் குடும்பத்தில் ஸல்லை தினசரி உபயோகிக்கக்கூடியவாறு அது விலை மலிவானது. மேலும், அது பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணத்தை மிச்சப்படுத்துகிறது. அது கொஞ்சம்கூடத் தங்காமல் உடன் கரைந்து விடுவதால் துளியும் வீணுவதில்லை.

உங்கள் குடும்பத்துக்கு ஸல்லை அளியுங்கள், அது சிக்கனமான மிகச் சிறந்த பானம்!

ஸல்

உடன் கரையும் மோல்டட் பால்

குடும்பத்தார் உடன் விரும்புவது!

—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுவது

## பாலச்சந்தர் படம் தயாரிப்பார்

நடிகரும், டைரக்டரும், சங்கீதவித்வானுமாகிய எஸ். பாலச்சந்தர், தானே கதை எழுதி, டைரக்ட் செய்து, இசை அமைத்து, சொந்தத்தில் ஒரு படம் தயாரிக்க விருக்கின்றார். இதற்காக எஸ். பி. கிரியேட்டர்ஸ் என்ற ஸ்தாபனத்தை அவர் ஆரம்பித்திருக்கின்றார். வே. லட்சுமணன் வசன எழுதவிருக்கும் இப்படத்தில், முற்றிலும் புதுமுகங்களே நடிப்பார்களாம்.

## 'அன்பு வெள்ளம்'

பனித்திரையைத் தயாரித்து வெளியிட்ட முக்தார் பிலிம்ஸார், தமது அடுத்த வெளியீடாக 'அன்பு வெள்ளம்' என்ற பெயரில் ஓர் படத்தைத் தயாரிக்கின்றார்கள். தர்மராஜன் என்பவர் எழுதிய கதைக்கு ஜாவர் சீதாராமன் திரைக்கதை எழுதுகின்றார். ஜெமினி கணேசன், எம். ஆர். ராதா, தங்கவேலு, சரோஜாதேவி, எம். சரோஜா ஆகியோர் நடிக்கவிருக்கும் இப்படத்தை வி. சீனிவாசன் டைரக்ட் செய்கிறார். கே. மகாதேவன் சங்கீதம் அமைக்கிறார். இப்படத்திற்கான ஆரம்ப பூஜை தமிழ் புதுவருடதினத்தன்று திருப்பதி கோவிலில் சிறப்பாக நடைபெற்றது.

## "தர்மம் தலைகாக்கும்"

தேவர் பிலிம்ஸாரின் அடுத்த தயாரிப்பாக 'தர்மம் தலைகாக்கும்' என்றபடம் தயாராக இருக்கிறதாம். இப்படத்தில் எம். ஜி. ஆர். உட்பட, 'தாயைக்காத்த தனய'னில் நடித்துள்ளவர்களே இப்படத்திலும் நடிப்பார்களாம்.

# கலை அரங்கம்

## யாழ்ப்பாணத்தில் இசை விழா ஆரம்பம்

### ஈழத்துக் கலைஞர்களின் இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம் ரசிகரஞ்சன சபாவின் 10-வது, 11-வது ஆண்டு இசைவிழா வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் முன்றலில் அமைக்கப் பெற்ற விசேஷபந்தலில் நேற்று மாலை ஆரம்பமானது.

ஐந்து தினங்கள் நடைபெறும் இந்த இசைவிழாவின் நேற்றைய நிகழ்ச்சிகள் பொன். முத்துக்குமாரன் தலைமையில் நடைபெற்றன. இன்றைய நிகழ்ச்சிகள் திரு. கே. பி. ஹரன் தலைமையிலும் மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் கலையரசு கே. சொர்ணலிங்கம் தலைமையிலும் சனிக்கிழமை நிகழ்ச்சிகள் மாவட்ட நீதிபதி திரு. சி. தனபாலசிங்கம் தலைமையிலும் கடைசிநாளான ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் தலைமையிலும் நடைபெறுகின்றன.

### நிகழ்ச்சிகள்

இசைவிழாவின் இரண்டாம் நாளான இன்றைய (வியாக்கிழமை) நிகழ்ச்சிகள் மாலை 4-15 மணிக்கு திரு. கே. கணேசன் கோஷ்டியாரின் மேளக்கச்சேரியுடன் ஆரம்பமாகின்றது. செல்வி. கௌரிபொன்னுத்துரை, திரு. என். செல்லமுத்து, திரு. கே. ஆர். நடராஜன், திருமதி முத்துலட்சுமி கைலாயநாதன், திரு. எஸ். சோமசுந்தரம் ஆகியோரின் இன்னிசைவிருந்தும் இரவு 11-15 மணிமுதல் திரு. தா. பொன்னம்பலத்தின் கதாகாலட்சேபமும் இன்றைய நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுள்ளன.

வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகள் மாலை 4-45 மணிக்கு திரு. பழனிவேல் கோஷ்டியாரின் மேளக் கச்சேரியுடன் ஆரம்பமாகிறது. அடுத்து எஸ். கோவிந்தராஜா, திரு ராம்குமாரசாமி, திரு. டி. ராஜலிங்கம், திருமதி தானகுசங்கரய்யர் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

### சனி, ஞாயிறு நிகழ்ச்சிகள்

சனிக்கிழமை மாலை 4-45 மணிக்கு திரு. பி. எஸ். ராஜகோபால் கோஷ்டியினரின் மேளக்கச்சேரியுடன் ஆரம்பமாகும் நான்காம் நாள் நிகழ்சிகளில் திரு. சி. செல்லத்துரை, திரு. என். சண்முகரத்தினம், திருமதி சரஸ்வதி பாக்கியராசா, திரு. எஸ். சத்தியலிங்கம் ஆகியோர் இசை விருந்தளிப்பர்.

என். கே. பத்மநாதன் கோஷ்டியாரின் மேளக் கச்சேரியுடன் 4-30 மணிக்கு ஆரம்பமாகும். இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகளில் திரு. பாலசிங்கம், திரு. கே. வி. தமபு, செல்வி நாகம்மா கதிர்காமர், திரு. பரம்தில்லைராஜா ஆகியோர் இன்னிசை விருந்தளிப்பர்.

ஐந்து நாள் நிகழ்ச்சிகளிலும் செல்வி பிரேமளா சின்னையா, திரு. கே. சிவபாதசுந்தரம், திரு எஸ். சோமாஸ்கந்தசர்மா, திரு. எஸ். சர்வேஸ்வர சர்மா, திரு. வி. கே. குமாரசாமி, திரு. ஜி. சண்முகானந்தன், திரு. கே. சித்திவிநாயகம், திரு. ஏ. சங்கரய்யர், திரு. எஸ். வைத்தீஸ்வர சர்மா ஆகியோர் வயலின் வாசிப்பர். திருவாளர்கள் எஸ். சந்திரசேகரன், கே. சிவபாதம், ஏ. எஸ். ராமநாதன், ஆர். பிரகலாதன், என். தங்கம், வி. அம்பலவாணர், ஏ. சந்தான கிருஷ்ணன், ஏ. கணேச சர்மா, டி. ஜெயசுந்தரம், டி. இரத்தினம், எம். என். செல்லத்துரை, வி. அம்பலவாணர் ஆகியோர் மிருதங்கம் வாசிப்பர்.

திரு. கே. சுப்பிரமணியன், திரு. கணபதி, திரு. குப்புச்சாமி, திரு. கே. கணபதிப்பிள்ளை, திரு. டி. எம். வெங்கடேசன், திரு. கே. கணேசன் ஆகியோர் கெஞ்சிரா வாசிப்பர்.

## 'ஆயிரங்காலத்துப் பயிர்'

நடிகர் டி. எஸ். துரைராஜின் மாஸ்டர் பிக்சர்ஸ், 'ஆயிரங்காலத்துப் பயிர்' என்னும் பெயரில் ஓர் படத்தைத் தயாரிக்கவிருக்கின்றனர். இப்படத்தில் சந்திரன், ராஜ என்ற இரண்டு புதுமுகங்கள் பிரதம பாகத்தில் நடிப்பார்களாம். மற்றும் காகா ராதாகிருஷ்ணன், கே. கண்ணன், டி. எஸ். துரைராஜா ஆகியோரும் இதில் நடிப்பார்கள். கதை, வசனம் நாக. சண்முகம்.

## ஏழரை லட்சம் கலன் ரஷ்ய பெட்ரோல்

கொழும்பு, புதன்

ஏழரை லட்சம் கலன் பெட்ரோலைக்கொண்ட ரஷ்ய எண்ணைக் கப்பல் இன்று கொழும்பில் இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கு பெட்ரோல் சப்ளை செய்தது.

## தமிழில் மாத்திரம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யரும் வாக்குவாதம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவராலும் செருப்பு சப்பாத்து என்ற சொற்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவ்விஷயம் மேயரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது, திரு. துரைராசா செருப்பென்று சொன்னபடியாற்றான் தான் சப்பாத்தைப் பாவித்ததாக திரு. இராஜசூரியர் சமாதானம் சொன்னார். ஆயினும் மேயரின் வற்புறுத்தலுக்கு இணங்க அவர்கள் மேற்படி பதங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டனர்.

பிரயோகம் நடந்த சில நிமிடங்களுக்கிடையில் திரு. இராஜசூரியர் "அலிபாபா" என்ற கேலிச் சொல்லை தமது பேச்சின்போது கையாண்டார்.

மாநகரசபை விவாதங்களின் போது திரு. இராஜசூரியர்

## 2-ம தடவை தடுப்பு மருந்து விநியோகம்

கொழும்பு, திங்கள்

இளம்பிள்ளை வாதத்திற்கான தடுப்பு மருந்து கிடைக்காதவர்களுக்கு இன்னும் இரண்டாவது தடவையாக தடுப்பு மருந்து விநியோகம் ஆரம்பமாகியது. இதுவரை கொழும்பில் 69 பேருக்குத்தான் வாதநோய் கண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மேலும், முன்பு தடுப்புமருந்து கொடுத்த பிள்ளைகளுக்கு இன்று மீண்டும் மருந்து கொடுக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

## ராஷ்டிரபதி தேர்தல்

புதுடில்லி, ஏப். 18

ராஷ்டிரபதி பதவிக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன், திரு. ஹரீம், திரு. யமுனா பிரஸாத் ஆகிய மூவரின் பெயர்கள் அபேட்சகர் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. ஸ்ரீமதி சுமித்திராதேவியின் பெயர் நிராகரிக்கப்பட்டது. இவரை எவரும் பிரேரிக்கவோ ஆமோதிக்கவோ இல்லை.

---

அடிக்கடி தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்த திரு. செல்லத்துரை இப்படி ஏற்படுமாயின் தாங்கள் வெளியேறப்போவதாகத் தெரிவித்தார்.

"ஈழநாடு" நடாத்தும்

## வடமாகாண கிரிக்கெட்வீரர் போட்டி

### முதலிடம் வகிப்பவர் யார்?

'விக்னராஜா' பரிசுக்கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் வடமாகாண கிரிக்கெட் வீரர் —1962 போட்டிக்கு, கிரிக்கெட் பிரியர்கள் அமோக ஆதரவு அளித்திருப்பதைக் குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். உங்களின் ஆர்வம் போட்டியை மேலும் மேலும் ஊக்குவிக்கிறது என்றுதான் சொல்லலாம்.

கிரிக்கெட் போட்டி குறித்துப் பலர், நல்ல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதற்கிணங்க கிரிக்கெட் போட்டியில் முதலாம் இரண்டாம், மூன்றும், நான்காம் இடம் வகிப்பவர்களின் பெயர்களை வாரத்துக்கொரு முறை வெளியிடுவதென்று முடிவுசெய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒரு கூப்பனை சிலர், பத்துச்சத முத்திரை செலவழித்து தபாலுறையில் அனுப்புகின்றனர். தனிக் கூப்பன் அனுப்ப விரும்புபவர்கள், தபாலட்டையில் கூப்பனை ஒட்டி எங்களுக்கனுப்பலாம். வசதியுள்ளவர்கள் கூப்பன்களை நிரப்பி, ஈழநாடு காரியாலயத்திலுள்ள விசேஷ கிரிக்கெட் போட்டி தபாற்பெட்டியிலும் போடலாம்.

இதுவரை நமக்குக் கிடைத்த கூப்பன்களின் பிரகாரம் முதலாம், இரண்டாம், மூன்றுமிடம் வகிப்பவர்களின் பெயர்களும் அவர்களுக்கு இதுவரை கிடைத்த வாக்கு எண்ணிக்கைகளும் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜே. கனகநாயகம், | யாழ். மத்தியகல்லூரி | 46 |
| . | கே. பாலகிருஷ்ணன் | யாழ் இந்துக்கல்லூரி | 27 |
| 3. | யே. அல்பிரட் | பரமேஸ்வராக்கல்லூரி | 07 |

'கிரிக்கெட் வீரர், போட்டி' பற்றிய மேலும் விபரங்களையெல்லாம் எமது அடுத்த சந்திப்பில் அறிந்துகொள்வோம்.

கூப்பன் இல: 7

வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ____________

கல்லூரி ____________

எனது பெயர் ____________

விலாசம் ____________

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

இப்பொழுது திரையிடப்படுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
கெப்பிட்டல் (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தனபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி...
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.